தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

10.04.2013 A.M

## சென்னையில் தினமும் 11.25 லட்சம் லிட்டர் ஆவின் பால் விற்பனை

ஆவின் நிறுவனம் மூலம் சென்னையில் தினமும் 11.25 லட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்பட்டு வருவதாக பால்வளத் துறை அமைச்சர் வி. மூர்த்தி தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பால்வளத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்து அவர் பேசியது:

2010-11-ம் ஆண்டில் நாள்தோறும் சராசரியாக 20.67 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டது. 2012-13-ல் 27.15 லட்சம் லிட்டர் கொள்முதல் செய்யப்பட்டு சாதனை படைக்கப்பட்டது.

அதுபோல 2012-13-ல் நாள்தோறும் 21.15 லட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. சென்னை மாநகரில் நாள்தோறும் 10.30 லட்சம் லிட்டராக இருந்த பால் விற்பனை 11.25 லட்சம் லிட்டராக அதிகரிக்கப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் 17 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் உள்ள 11,397 தொடக்க பால் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள 4,25,076 பேர் ஆவின் நிறுவனத்துக்கு பால் வழங்கி வருகின்றனர்.

அதிகபட்சமாக வேலூர் ஒன்றியத்தில் 91,352, திருச்சி ஒன்றியத்தில் 53,107, சேலம் ஒன்றியத்தில் 48,783, ஈரோடு ஒன்றியத்தில் 38,913 உறுப்பினர்கள் ஆவின் நிறுவனத்துக்கு பால் வழங்கி வருகின்றனர் என்றார் அமைச்சர் மூர்த்தி.

## 3 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி

கடலூர் மாவட்டத்தில் 3 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி நடைபெற்று வருகிறது.

கோமாரி நோய் பொதுவாக குளிர், பனிக்காலங்களில் ஏற்படுகிறது. இந்நோய் பாதிக்கப்பட்ட இடங்களிலிருந்து வாங்கி வரப்பட்ட கால்நடைகள் மூலமும், சுகாதாரமற்ற கால்நடை வளர்ப்பு, கால்நடைகளுக்கு தடுப்பூசி போடாமல் இருத்தல் ஆகிய காரணங்களால் விரைவாக காற்றின் மூலம் பரவும் தன்மை கொண்டது.

இந்நோய் பாதிக்கப்பட்ட மாடுகளின் சிறுநீர், பால், உமிழ்நீர், சாணம் ஆகியவற்றால் மற்ற கால்நடைகளுக்கும் பரவுகிறது.

நோய் அறிகுறிகள்

நோய் தாக்குதலுக்குள்ளான கால்நடைகள் திடீரென்று தீவனம் உட்கொள்ளாது. அதிக காய்ச்சல் இருக்கும். நாக்கு, உதடு, கால் குளம்புகளுக்கு இடையில் நீர் கொப்புளங்கள் உருவாகி பின்பு புண் ஏற்பட்டு ஒரு வாரத்துக்கு குறையாமல் தீவனம் உட்கொள்ளாமல் இருக்கும். இந்நோய் கண்ட கால்நடையின் பாலை இளம்கன்றுகள் குடித்தால் கன்றுகள் இறக்க நேரிடும்.

கறவை மாடுகளில் பால்வற்றி மாடுகளின் நிறங்கள் மாறி வெயில் காலங்களில் அதிகப்படியான மூச்சு வாங்குதல் போன்ற அறிகுறிகள் தென்படுவதோடு, நோய் தாக்கிய பசுக்களில் சினைப் பிடிப்பு தடைபடுகிறது.

இதனால், பால் உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டு கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதார இழப்பு ஏற்படுவதால் இத்தடுப்பூசி போட்டு, பாதிப்புகளிலிருந்து கால்நடைகளைக் காப்பாற்றலாம்.

கடலூர் மாவட்டத்தில் 3 லட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் பணி கடந்த 4-ம் தேதி தொடங்கியது.

3 மாதத்துக்கு மேற்பட்ட கன்றுகள், பசு, எருது, காளை, எருமையின கால்நடைகளுக்கு போடப்படவுள்ளது. இதற்காக 45 குழுக்கள் அமைக்கப்பட்டு 160 பணியாளர்கள் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கடலூர் மாவட்டம், நெல்லிக்குப்பம் அருகே நத்தம் ஊராட்சியில் கோமாரி தடுப்பூசி முகாம் செவ்வாய்க்கிழமை நடந்தது. முகாமுக்கு, ஊராட்சித் தலைவர் அகிலாண்டேஸ்வரி தலைமை வகித்தார்.

கால்நடை உதவி மருத்துவர் சுகுணா, கால்நடை ஆய்வாளர் ராஜமச்சேந்திரசோழன், பராமரிப்பு உதவியாளர் சாந்தி ஆகியோர் 200-க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டனர்.

11-ம் தேதி சித்தரசூர், 12-ம் தேதி எய்தனூர், 16-ம் தேதி கீழ் அருங்குளம், சுந்தரவாண்டி, 17-ம் தேதி பாலூர் ஊராட்சிகளில் இந்த முகாம் நடைபெறவுள்ளது.

கோமாரி நோயினால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து கால்நடைகளைப் பாதுகாக்க அனைத்து கால்நடை வளர்ப்போரும் தடுப்பூசி போடப்படும் இடத்துக்கு தவறாது கொண்டு சென்று தடுப்பூசி போட்டு கால்நடைகளுக்கு ஏற்படும் பாதிப்புகளிலிருந்து பாதுகாப்பதோடு, பொருளாதார இழப்பையும் தவிர்க்க வேண்டும் என்று கால்நடைத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## திண்டுக்கல் மாவட்டத்தில் உழவர் பெருவிழா - ஆட்சியர் தகவல்

2013-14-ஆம் நிதியாண்டுக்கான உழவர் பெருவிழா ஏப்ரல் 14 ஆம் தேதி தொடங்கி, மே 20 ஆம் தேதி வரை நடைபெறுகிறது என, மாவட்ட ஆட்சியர் ந. வெங்கடாசலம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து, அவர் வெளியிட்டுள்ள செய்தி:

மாவட்டத்தில் உள்ள 359 வருவாய் கிராமங்களிலும் உழவர் பெருவிழா நடத்தப்பட உள்ளது. ஏப்ரல் 14 முதல் மே 20 ஆம் தேதி வரை, ஞாயிற்றுக்கிழமைகள் தவிர அனைத்து நாள்களிலும் நடத்தப்படும்.

இந்த விழாவையொட்டி, விவசாயிகள் பயன்பெறும் வகையில், வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, விதைச் சான்று துறை, கால்நடைத் துறை, பட்டு வளர்ச்சித் துறை, மீன்வளர்ச்சித் துறை, பொதுப்பணித் துறை (நீர்வள ஆதார அமைப்பு), முன்னோடி வங்கி, தமிழ்நாடு கால்நடை கல்லூரி மற்றும் வேளாண் அறிவியல் மையங்கள் ஆகியன இணைந்து, கண்காட்சியும் அமைக்க இருக்கின்றன.

மேலும், அரசின் திட்டங்கள் குறித்தும், அதனைப் பெறுவதற்கான தகுதிகள், விவசாயம் குறித்த விவரங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள் மற்றும் கையேடுகளும் வழங்கப்பட உள்ளன.

விவசாயம் பற்றிய தகவல் அடங்கிய கண்காட்சி ஊர்தி அமைக்கப்பட்டு, உழவர் பெருவிழா நடத்தப்படும் கிராமங்களுக்குச் சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

நவீன வேளாண் முறை, சொட்டு நீர்ப்பாசனம் போன்றவற்றைப் பயன்படுத்தி, அதிக மகசூல் பெற்ற விவசாயிகள் விழாவில் கெப்ரவிக்கப்படுவார்கள்.

உழவர் பெருவிழா நடைபெற உள்ள கிராமங்களில் மதிய உணவு சிறப்பாக ஏற்பாடு செய்யப்படும். உழவர் பெருவிழா நடைபெற உள்ள கிராமங்களில், 3 நாள்களுக்கு முன் விழா தொடர்பான தகவல் தெரிவிக்கப்படும், என தெரிவித்துள்ளார்.

## விவசாயிகளுக்கு கோடையிலும் வருவாயை ஈட்டித் தரும் நித்திய கல்யாணி சாகுபடி

விருதுநகர் மாவட்ட பகுதி கிராமங்களில் கடும் வறட்சியிலும் நித்திய கல்யாணிச் செடி விவசாயிகளுக்கு அதிக வருவாயை ஈட்டித் தரும் சாகுபடி பயிராக விளங்கி வருகிறது. அதோடு, ஒரு முறை விதைப்புச் செய்தால் மூன்று முறை குறுகிய நாள்களில் அறுவடை செய்ய முடியும் என்பதால் அதிக பரப்பளவு நிலங்களில் விவசாயிகளால் விரும்பி பயிரிடப்பட்டு வருகிறது.

விருதுநகர் மாவட்டம் கடும் வறட்சியான மாவட்டப் பகுதியாக விளங்கி வருகிறது. அதோடு, மழை பெய்தால் தான் விவசாயம் என்கிற நிலையே நீடிக்கிறது.

இந்நிலையில் கடும் கோடை மற்றும் வறட்சியையும் தாங்கி விளையக் கூடிய நித்திய கல்யாணிச் செடியை கிராமங்களில் விவசாயிகள் ஆர்வத்துடன் பயிரிட்டு வருகின்றனர்.

இப்பயிர் வறட்சியைத் தாங்கி வளரக் கூடிய பயிராக இருக்கிறது. அதோடு, மருத்துவக்குணம் கொண்ட பயிராகவும் இருக்கிறது. அந்த வகையில் விருதுநகர் பேராளி, சின்னப்பேராளி, குல்லூர்சந்தை, சிவஞானபுரம், பாவாலி, ஆமத்தூர், அப்பையநாயக்கன்பட்டி, ஆர்.ஆர்.நகர், எ.புதுப்பட்டி,

வெம்பக்கோட்டை, ஓத்தையால், புதுப்பட்டி, ஆமணக்கு நத்தம், வெம்பக்கோட்டை, சிவகாசி, ஜமீன்சல்வார்பட்டி, தாயில்பட்டி, படந்தால், நரிக்குடி, திருச்சுழி உள்ளிட்ட பகுதிகளில் கண்ணுக்கு எட்டிய தூரம் வரையிலும், மானாவாரியிலும், இறவைப் பாசனத்திலும் 30 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் பயிரிட்டு உள்ளனர்.

ஏனெனில், இது போன்ற பயிர்களை பயிரிடுவதன் மூலம் அதிக லாபம் பெறலாம். பணப்பயிர்களை பயிரிட்டால் அதிக பராமரிப்புச் செலவு ஆகிறது. அதோடு, சாகுபடி செய்கிற சமயத்தில் விலையும் குறைந்து விடுவதால் விவசாயிகளுக்கு நஷடம் ஏற்படுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

ஒரு ஏக்கரில் சாகுபடி செய்வதற்கு நன்றாக உழவு செய்து, இரண்டு கிலோ விதை வாங்கி விதைப்பு பணிகளை மேற்கொள்ளும் வரையில் ரூ.5 ஆயிரம் வரையில் ஆகும். அதோடு ஒரு முறை விதைத்தால், மூன்று முறை அறுவடை செய்யலாம்.

வறட்சியை தாங்கி வளரும் பயிரானாலும், தொடர்ந்து மூன்று நாள்கள் வரையில் மழை பெய்தால் மகசூல் கடுமையாக பாதிக்கும். ஒரு ஏக்கரில் தண்ணீர் வசதியோடு பயிரிட்டால் 85 நாள்களில், முதல் அறுவடையில் 5 குவின்டாலும், குவின்டாலுக்கு ரூ. 5300 வரை விலை கிடைக்கிறது.

அதேபோல், 2ஆவது 65 நாள்களில் அறுவடை செய்தால் 7 குவின்டாலும், 3-வது முறையாக 45 நாள்களில் அறுவடை செய்தால் 10 குவின்டாலும் என ஒரே விதைப்பில் மூன்று அறுவடைகளை மேற்கொள்ள முடியும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

இது குறித்து பேராளியைச் சேர்ந்த முருகேசன் கூறுகையில், இப்பகுதியில் கடும் வறட்சி காரணமாக இப்பயிரை பயிரிட்டு வருகிறேன். தொடக்கத்திலிருந்தே பேராளி கிராமப் பகுதியில் தான் அதிகளவு விதைத்து வருகின்றனர். கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு வரையில் ஒரு கிலோ நித்திய கல்யாணி ரூ. 27 வரையில் விலைபோனாது. தற்போது, ரத்தப்புற்றுநோய்க்கு சிகிச்சையளிக்கும் மருத்துவக்குணம் கொண்டதாக இருப்பதால் விலை அதிகமாக கொடுத்து வாங்கிச் செல்கின்றனர்.

இதனை, ஆலைகளில் பக்குவப்படுத்தி அரைத்து பாக்கெட்டுகளாக வெளிநாடுகளான இத்தாலி, ஜெர்மனி மற்றும் டென்மார்க் உள்ளிட்ட வெளிநாடுகளுக்கு மருந்து மாத்திரை தயாரிப்பதற்கு அனுப்பி வருவதாகவும் தெரிவித்தார்.

நித்தியகல்யாணி சாகுபடி தொடர்பாக தோட்டக்கலை துணை இயக்குநர் மதியழகன் தெரிவித்ததாவது: விருதுநகர் மாவட்ட பகுதிகளில் பராமரிப்பு குறைவு என்பதால் அதிகளவு விளை நிலங்களில் நித்திய கல்யாணி பயிரிட்டு வருவதோடு, போதுமான விலையும் கிடைக்கிறது. தற்போது, கிராமங்களில் விவசாயிகளின் விருப்ப சாகுபடிபயிராக மாறிவருகிறது.

இதேபோன்ற மூலிகைச் செடியான அவுரிக்கு தோட்டக்கலைத்துறை மூலம் ஏக்கருக்கு ரூ.5 ஆயிரம் வரையில் மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் இதனைப் பயிரிடுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் வரும் காலங்களில் மானியம் வழங்குவதற்கு அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் தெரிவித்தார்.

## கொப்பரை விலை நிர்ணயம்: அரசுக்கு பா.ஜ.க கோரிக்கை

பாரதிய ஜனதா கட்சியின் பொங்கலூர் ஒன்றிய செயற்குழுக் கூட்டம், நாதகவுண்டம்பாளையத்தில் திங்கள்கிழமை நடந்தது .

ஒன்றியத் தலைவர் அசோக்குமார் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர்கள் சீனிவாசன், செந்தில் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய பொதுச்செயலாளர் துரை கண்ணன் வரவேற்றார். திருப்பூர் மாவட்டத் தலைவர் மணி,மாவட்ட துணைத் தலைவர் ராஜகோபால், சம்பத்குமார் உள்பட பலர் பங்கேற்றனர்.

கூட்டத்தில், தேங்காய் கொப்பரையின் விலையை கிலோவுக்கு ரூ. 60 ஆக தமிழக அரசு விலை நிர்ணயம் செய்ய வேண்டும். கூட்டுறவு சங்கம் மூலம் அனைத்து விவசாயிகளுக்கும் வட்டியில்லாக் கடன் மற்றும் மானிய விலையில் விதைகள் வழங்க வேண்டும். தமிழகத்தில் பூரண மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கை தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## ஏப்.14 முதல் கிராமங்களில் உழவர் பெருவிழா

நாமக்கல் மாவட்டத்திலுள்ள அனைத்து வருவாய் கிராமங்களிலும் உழவர் பெருவிழா ஏப்ரல் மாதம் 14ஆம் தேதி தொடங்கி, மே மாதம் 20ஆம் தேதி  வரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் டி.ஜகந்நாதன் தலைமையில் நாமக்கல்லில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில், இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்த அரசின் அனைத்து முன்னோடித் திட்டங்களையும் விவசாயிகள் தெரிந்து பயனடைய வேண்டும் என்ற நோக்கத்தில் வருவாய் கிராமங்கள் தோறும் இந்த உழவர் பெருவிழா நடத்தப்பட உள்ளது.

ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் குறைந்தபட்சம் 250 முதல் 300 விவசாயிகளை பங்கேற்கச் செய்யும் இந்த உழவர் பெருவிழாவில், வேளாண்மை சார்ந்த அனைத்து துறைகளின் கருத்துக் காட்சிகளை இடம்பெறச் செய்வதுடன், சிறந்த தொழில்நுட்பங்களை கடைபிடித்து பயனடைந்த விவசாயிகளின் ஆலோசனைகளும் அளிக்கப்படும்.

மேலும், மானிய விலையில் விவசாய இடுபொருள்கள் வழங்கப்படவும் உள்ளது. மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு மண் மாதிரி முடிவுகளும் அளிக்கப்பட உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

வேளாண் இணை இயக்குநர் ஆ.பிரபாகரன், தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் கதிரவன், வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் இளையப்பன், முன்னோடி வங்கி மேலாளர் அறிவழகன், வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் பா.மோகன், கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் சக்திவேல் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### மேட்டூர் அணை நீர்மட்டம்: 26.21 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 26.21 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 230 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 496 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

### கோடை பயிர்களைக் காப்பாற்ற 12 மணிநேர மும்முனை மின்சாரம் தேவை

கோடை பயிர்களைக் காப்பாற்ற 12 மணிநேரம் மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும் என்றார் தமிழக விவசாயிகள் சங்க மாநில தலைவர் எம்.ஆர். சிவசாமி. தஞ்சாவூரில் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தது:

கடந்த காலங்களில் மற்ற மாவட்டங்களில் மின்வெட்டு இருந்தாலும் நெல் சாகுபடி நீடிக்க காவிரி டெல்டாவில் 20 மணி நேர மும்முனை மின் விநியோகம் செய்யப்பட்டது. சம்பா பயிரை காப்பாற்ற 12 மணிநேரம் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டது.

வழக்கம்போல் காவிரி டெல்டா மாவட்டங்களில் மின் விநியோகம் இருக்கும் என்ற நம்பிக்கையில் தஞ்சை மாவட்டத்தில் சுமார் 50 ஆயிரம் ஏக்கரில் கோடை நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஆனால், இப்போது கடுமையான மின்வெட்டு நிலவுவால் 3 மணிநேரம் கூட மும்முனை மின்சாரம் கிடைப்பதில்லை.

இதனால், காவிரி டெல்டாவில் கோடை நெல் சாகுபடி பயிர்கள் கருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே, சாகுபடி பயிர்களைக் காப்பாற்ற 12 மணிநேரம் மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும்.

தஞ்சை மாவட்டத்தில் 3 லட்சம் ஏக்கரில் சம்பா சாகுபடி செய்ததில் காவிரி நீர் வராததால், நெல் பயிர் கருகியதற்கு சுமார் 12 ஆயிரம் ஏக்கர் மட்டுமே பயிர் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. இந்த பிரச்னையில் தஞ்சை மாவட்டம் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

பயிர் இழப்பீட்டுத் தொகை கிடைக்காததால் தஞ்சை உள்பட அனைத்து டெல்டா விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 20 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும்.

காவிரியில் தண்ணீர் வராததால் மேட்டூர் அணை நீர்மட்டம் மிகவும் குறைந்து அணை வற்றிடும் அபாயத்தில் உள்ளது. இதனால் தமிழகத்தில் குடிநீருக்கே பஞ்சம் ஏற்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

அண்டை மாநிலங்கள் தமிழகத்திற்கு வரும் நதிகளுக்கு இடையே தடுப்பணை கட்டி தண்ணீர் விடாமல் தடுக்கின்றனர். தென்பெண்ணை ஆற்றில் ராட்சத மோட்டார்கள் வைத்து தண்ணீரை உறிஞ்சி கர்நாடகாவில் குளம், குட்டையில் தண்ணீர் நிரப்பப்படுகிறது. எனவே, மத்திய அரசு தலையிட்டு தமிழகத்தில் காவிரி நடுவர் மன்ற தீர்ப்புப்படி காவிரிக்கு தண்ணீர் விடவும், மற்ற நதிகளில் தடுப்பணை கட்டி தண்ணீர் திருடுவதை தடுத்து நிறுத்தவும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அல்லது அண்டை மாநிலங்கள் தண்ணீர் தனக்குதான் சொந்தம் என்று செயல்படுவதை தடுக்க நதிகளை தேசியமயமாக்க வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி ஏப். 12-ம் தேதி தஞ்சை மாவட்ட விவசாயிகள் சங்க கூட்டம் மாலை 4 மணிக்கு பெசண்ட் அரங்கில் நடைபெற உள்ளது என்றார் சிவசாமி.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

10.04.2013 A.M

## போராட்டம்! வறட்சியால் வாடும் பயிரை காப்பாற்ற... கைகொடுக்கும் நடமாடும் ஜெனரேட்டர்

கரூர்: வறட்சியில் வாடும் பயிர்களை காக்க, நடமாடும் ஜெனரேட்டர்கள் மூலம் தண்ணீர் பாய்ச்சி விவசாயிகள் போராடி வருகின்றனர்.

கரூர் மாவட்டத்தில் காவிரி ஆற்று பாசன பகுதியான கிருஷ்ணராயபுரம், லாலாபேட்டை, மாயனூர், மணவாசி, குளித்தலை, நச்சலூர், நங்கவரம் உள்ளது. இங்கு, 53 ஹெக்டேர் நிலப்பரப்பில் பயிர் சாகுபடி நடந்து வந்தது. ஆனால் பருவ மழை பொய்த்ததாலும், கர்நாடகம் தண்ணீர் திறக்க மறுத்ததாலும், மேட்டூர் அணையில் நீர்மட்டம், வரலாறு காணத அளவுக்கு குறைந்துள்ளது. இதனால் மேற்கண்ட பகுதிகளுக்கு பாசனத்துக்கு தண்ணீர் கிடைக்கவில்லை. இருப்பினும், 30 ஆயிரம் ஹெக்டேர் நிலத்தில் மட்டும் வெற்றிலை, வாழை, கரும்பு, நெல் ஆகிய பயிர்களை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். அறுவடை செய்யும் தருவாயில் உள்ள வாழை, எள், வெற்றிலை போன்ற பயிர்கள், கடும் வறட்சியின் காரணமாக கருகி வருகின்றன. இதனால் விவசாயிகள் எப்படியும் வாழையை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக போராடி வருகின்றனார். கிணறு மற்றும் ஆழ்துளை கிணறுகளை நம்பி பயிரிட்ட விவசாயிகள், மின் வெட்டு காரணமாக, பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாமல் திணறி வருகின்றனர். தற்போது நடமாடும் ஜெனரேட்டரை வாடகைக்கு எடுத்து, மோட்டார் மூலம் இயங்கி தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர். இதுகுறித்து மாயனூர் பகுதி விவசாயிகள் கூறியதாவது:

முதல்வர் ஜெயலலிதா, சட்டசபையில் டெல்டா பகுதிகளுக்கு, ஆறு மணி நேரம் மின்சாரம் வழங்கப்படும் என, தெரிவித்தார். விவசாயத்துக்கு தேவையான மும்முனை மின்சாரம் ஒரு நாளைக்கு, மூன்று மணி நேரம் கிடைப்பது அரிதாக உள்ளது. மேலும் இரவு நேரங்களில், ஒரு மணி நேரத்துக்கு, ஒருமுறை மின்வெட்டு செய்யப்படுகிறது.

இதனால் வறட்சியால் கருகும் பயிரை, எப்படியாவது காக்க வேண்டும் என, போராடி வருகிறோம். தற்போது நவீன முறையில் நடமாடும் ஜெனரேட்டர்கள் பயன்படுத்தி வருகின்றோம். இந்த நடமாடும் ஜெனரேட்டர், சிறிய வகை டிராக்டருடன் இணைக்கப்பட்டுள்ளது.

இதனால் குறுகலான பகுதிகளுக்கு கூட இந்த ஜெனரேட்டர்களை எடுத்து செல்ல முடியும். மேலும், 20 கே.வி., திறன் கொண்ட ஜெனரேட்டர், டிராக்டர் இன்ஜினுடன் சேர்ந்து இயங்கும்படி பொருத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் கிணறு அல்லது போர்வெல் உள்ள மின் மோட்டர்களில் இணைத்து, எளிதில் தண்ணீர் எடுக்க முடிகிறது. ஒரு மணிநேரம் இயக்க, 5 முதல், 6 லிட்டர் வரை, டீஸல் தேவைப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு தண்ணீர் பாய்ச்ச, 6 மணி நேரம் தேவைப்படுகிறது. மேலும் தொடர் மழையின்மை காரணமாக, நிலத்தடி நீர் மட்டம், அதல பாதாளத்துக்கு சென்று விட்டது. இதனால் கிணறு மற்றும் போர்வெல்களில் தண்ணீர் எடுப்பது காலதாமதமாகிறது. நடமாடும் ஜெனரேட்டர்களுக்கு ஒரு நாளைக்கு, 1,500 ரூபாய் வாடகை வசூலிக்கப்படுகிறது. மின் பற்றாக்குறையால் வேறு வழியின்றி இதை பயன்படுத்தி வருகிறோம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

## உயிர் தண்ணீரின்றி ஊசலாடும் தென்னை மரங்கள் வறட்சியால் மிரட்சி : 50 ஆயிரம் ஏக்கர் பாதிப்பு

பொள்ளாச்சி : வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்கள் குறித்த உத்தேச கணக்கெடுப்பில், பொள்ளாச்சி, கிணத்துக்கடவு தாலுகாக்களில், 50 ஆயிரம் ஏக்கர் மரங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக, தெரிய வந்துள்ளது. தமிழகத்தில், கோவை, தஞ்சை, திண்டுக்கல், கன்னியாகுமரி, தர்மபுரி மாவட்டங்களில், தென்னை அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளது. இதில், கோவை மாவட்டத்தில் மட்டும் 2.32 லட்சம் ஏக்கர் பரப்பில் தென்னை மரங்கள் பயிரிடப்பட்டுள்ளன.இம்மாவட்டத்தில், பொள்ளாச்சி, கிணத்துக்கடவு தாலுகாக்களில், தென்னை விவசாயம்

பிரதானமாக உள்ளது. இங்கு, 72 ஆயிரம் ஏக்கர் பரப்பில் தென்னை பயிரிடப்பட்டுள்ளது. தேங்காய்கள் மட்டுமின்றி, நார் பொருட்களும் வெளிநாடுகளுக்கு அதிகளவில்

ஏற்றுமதியாகிறது.கடந்தாண்டு, விவசாயிகள் அதிகளவில் எதிர்பார்த்த தென்மேற்கு, வடகிழக்கு பருவ மழைகள் பொய்த்து போனதுடன், நிலத்தடி நீர்மட்டமும் சரிந்தது. தென்னை மரங்களுக்கு போதிய நீர் கிடைக்காமல் வாடின.மரங்களுடன், காய்கறி பயிர்களும் நீரின்றி வாடியதால், விவசாயிகள், சொட்டு நீர் பாசனம் அமைத்து உயிர் தண்ணீர் கொடுத்தனர். ஆனால், கடும் வெயிலின் தாக்கத்தால், சொட்டு நீர் பாசன முறையும் கைக்கொடுக்காத நிலை உள்ளது. பொள்ளாச்சி, கிணத்துக்

கடவு தாலுகாக்களில், தென்னை மரங்களின் காய்ப்புத்திறன் குறைந்து வருகிறது.இதனால், கவலை அடைந்த தென்னை விவசாயிகள் நிவாரணம் வழங்க கோரி, அரசுக்கு கோரிக்கை விடுத்தனர். இதையடுத்து, மாநிலம் முழுவதும் வேளாண் துறை அதிகாரிகள் மூலம் வறட்சியால்

பாதித்த தென்னை மரங்கள் குறித்த கணக்கெடுப்பு மேற்கொள்ள அரசு உத்தரவிட்டுள்ளது.பொள்ளாச்சி, கிணத்துக்கடவு பகுதிகளில் கணக்கெடுப்பு பணி நடக்கிறது. வடக்கு ஒன்றியத்தில், மட்டும் 18 ஆயிரம் ஏக்கர் தென்னை மரங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாக, உத்தேசமாக கணக்கிடப்பட்டுள்ளது. இதுபோல், இரு தாலுகாக்கள் முழுவதும் 50 ஆயிரம் ஏக்கர் பரப்பிலான தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக, கணக்கிடப்பட்டுள்ளது.வேளாண் அதிகாரிகள் கூறுகையில், "கிராமங்களில், தற்போது நடத்தப்பட்ட உத்தேச கணக்கெடுப்பை அடிப்படையாக கொண்டு, அந்தந்த கிராம நிர்வாக அலுவலர்கள் மூலம் மீண்டும் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படும். இதன் அறிக்கை அரசுக்கு அனுப்பப்படும்; நிவாரணம் வழங்குவது குறித்து அரசு முடிவு செய்யும்' என்றனர்.காய்ந்த மரத்துக்கு ரூ.2000

தமிழக விவசாயிகள் சங்க தாலுகா செயலாளர் முத்துசாமி கூறுகையில், ""மழை பொய்த்து போனதாலும், வெயிலின் தாக்கத்தாலும், தென்னை மரங்கள் காய்ந்து போயுள் ளன. இதனால், விவசாயிகள் இந்தாண்டு, அதிக நஷ்டத்தை சந்திக்க வேண்டியுள்ளது. நீண்ட போராட்டத்துக்கு பின், தென்னை மரங்களை கணக்கெடுத்து வருகின்றனர். சரியான கணக்கெடுப்பு மேற்கொண்டு, காய்ந்த மரம் ஒன்றுக்கு இரண்டாயிரம் ரூபாயும், சற்று பச்சை மரத்துக்கு ஆயிரம் ரூபாயும் வழங்க வேண்டும், என, அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்நிவாரணம் கிடைத்தால்தான், விவசாயிகள் மீண்டும், தென்னை மரக்கன்று நட்டு பயிர் செய்ய முடியும். அப்போதும், குறைந்தபட்சம் மரத்தில் காய்ப்பு ஏற்படுத்த, ஐந்தாண்டுகள் ஆகும். நாட்டு மரமாக இருந்தால், பத்தாண்டுகள் ஆகும்," என்றார்.

### உள்நாட்டில் பாக்கு விலை 26 சதவீதம் வீழ்ச்சி கண்டது

உள்நாட்டில், தற்போது, ஒரு கிலோ வெள்ளை பாக்கின் விலை, 130 ரூபாயாக மிகவும் சரிவடைந்துள்ளது. இது, கடந்த ஆண்டின் இதே காலத்தில், 176 ரூபாயாக இருந்தது. ஆக, சென்ற ஆண்டை விட, தற்போது, இதன் விலை, 26 சதவீதம் வீழ்ச்சி கண்டுள்ளது. கடந்த ஆண்டை விட, நடப்பாண்டில், பாக்கு விற்பனையும், 24 சதவீதம் குறைந்துள்ளது.தரம் இல்லாத, விலை குறைந்த இறக்குமதி மற்றும் பல மாநிலங்களில், குட்கா உள்ளிட்ட பாக்கு பொருட்கள் பயன்பாட்டிற்கு தடை விதிக்கப்பட்டு உள்ளதால், இதன் விலை சரிவடைந்து வருவதாக, மத்திய பாக்கு மற்றும் கோகோ சந்தைப்படுத்தும், கூட்டுறவு நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் சுரேஷ் பண்டாரி தெரிவித்தார்.

வங்க தேசம், இந்தோனேஷியா, நேபாளம் ஆகிய நாடுகளில் இருந்து, தரம் குறைந்த மற்றும் மலிவான விலையில், அதிகளவில் பாக்கு இறக்குமதியாகிறது.கடந்த, 2009-10ம் நிதியாண்டில், வங்க தேசத்தில்இருந்து, 7,600 டன் பாக்கு இறக்குமதியானது. இந்நிலையில், 2011ம் ஆண்டு நவம்பர் மாதம் முதல், வங்க தேசத்திலிருந்து, வரி இல்லாமல், பாக்கு இறக்குமதி செய்து கொள்ள, மத்திய அரசு, அனுமதி அளித்தது. இதையடுத்து, அந்நாட்டிலிருந்து மேற்கொள்ளப்பட்ட பாக்கு இறக்குமதி, சென்ற, 2012-13ம் நிதியாண்டில், டிசம்பர் வரையிலான காலத்தில், 7 மடங்கு அதிகரித்து, 53 ஆயிரம் டன்னாக உயர்ந்துள்ளது.

- பிசினஸ் ஸ்டாண்டர்ட் உடன் இணைந்து –

## கடலில் மீன் பிடிக்க தடையால்முட்டை விலை மேலும் உயரும்

நாமக்கல்:வங்கக்கடலில், மீன் பிடிப்பதற்கான தடை அமலுக்கு வருவதால், முட்டைக்கான தேவை அதிகரித்து, விலை உயரும் வாய்ப்புள்ளது' என, தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுவின், நாமக்கல் மண்டல தலைவர், செல்வராஜ் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:கோடை வெயில் தாக்கம் காரணமாக, பர்வாலா, விஜயவாடா, ஹோஸ்பெட், நாமக்கல் உள்ளிட்ட மண்டலங்களில், முட்டை உற்பத்தி குறைந்துள்ளது. அதன் காரணமாக, கோல்கட்டா உள்ளிட்ட முட்டை விற்பனை மண்டலங்களில், விலை உயரத் துவங்கியது. அதேபோல், ஐதராபாத், ஹோஸ்பெட் போன்ற கொள்முதல் மண்டலங்களிலும், முட்டை விலை, உயரத் துவங்கியுள்ளது.

காய்கறி விலையேற்றம், கேரளாவில் ஈஸ்டர் பண்டிகை நிறைவு ஆகிய காரணங்களால், முட்டை நுகர்வு அதிகரித்துள்ளது. எனவே, நாடு முழுவதும் முட்டை விலை ஏற்றம் காணத் துவங்கியது. மற்ற மண்டலங்களின் விலை நிலவரத்தை அனுசரித்து, நாமக்கல்லில், நடைபெற்ற கூட்டத்தில், முட்டை விலை, 15 காசு உயர்த்தி, 300 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.ஏப்ரல், 15 ம் தேதி முதல், கிழக்கு கடற்கரையில், மீன்பிடித் தடை அமலுக்கு வருவதால், முட்டைக்கான தேவை மேலும் அதிகரித்து, விலை உயர வாய்ப்புள்ளது.தீவன மூலப்பொருட்கள் பற்றாக்குறையை சமாளிக்க, பண்ணைகளில், 65 வாரங்களுக்கு மேற்பட்ட கோழிகளை, கழிவுக் கோழிகளாக பிடித்து விற்பனை செய்து, பண்ணைத் தொழிலை லாபகரமாக நடத்த வேண்டும். இவ்வாறு, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாட்டின் முந்திரி ஏற்றுமதி 15 சதவீதம் சரிவடையும்

கொச்சி:சென்ற, 2012-13ம் நிதியாண்டில், நாட்டின் முந்திரி ஏற்றுமதி, 10-15 சதவீதம் சரிவடையும் என, இந்திய முந்திரி ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சில் (சி.இ.பி.சி.,) தெரிவித்துள்ளது.இதற்கு எடுத்துக்காட்டாக, சென்ற, 2012-13ம் நிதியாண்டில், ஏப்ரல் முதல் பிப்ரவரி வரையிலான, 11 மாத

காலத்தில், நாட்டின் முந்திரி ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், 93,029 டன்னாகவும், மதிப்பின் அடிப்படையில், 3,636 கோடி ரூபாயாகவும் சரிவடைந்துள்ளது.

முந்திரிக்கொட்டை:இது, இதற்கு முந்தைய, 2011-12ம் நிதியாண்டின் இதே காலத்தில், அளவு மற்றும் மதிப்பின் அடிப்படையில் முறையே, 1,21,578 டன் மற்றும் 4,017 கோடி ரூபாயாக அதிகரித்து காணப்பட்டது என, சி.இ.பி.சி., புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.மேலும், சென்ற, 2011-12ம் நிதியாண்டில், முந்திரிக் கொட்டை ஏற்றுமதி, அளவுமற்றும் மதிப்பின் அடிப்படையில் முறையே, 1,31,760 டன் மற்றும் 4,391 கோடி ரூபாயாக இருந்தது. கடந்த, 2010-11ம் நிதியாண்டுடன் ஒப்பிடும் போது, சென்ற, 2011-12ம் நிதியாண்டில், முந்திரி கொட்டை ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், 24.6 சதவீதமும், மதிப்பின் அடிப்படையில், 56 சதவீதமும் சிறப்பாக வளர்ச்சி கண்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

முந்திரி பருப்பு பயன்பாட்டில், சர்வதேச அளவில், இந்தியா முன்னிலையில் உள்ளது. இதனை எடுத்துக்காட்டும் விதமாக, அளவின் அடிப்படையிலான, நம்நாட்டின் முந்திரி பயன்பாடு, 1,70,000 - 1,90,000 டன் என்ற அளவில் உள்ளது.இது தவிர, உலகளவில், முந்திரி கொட்டையை பதப்படுத்தி, ஏற்றுமதி செய்வதில், நம்நாடு முன்னணி நாடுகளுள் ஒன்றாக விளங்குகிறது.டாலருக்கு எதிரான ரூபாய் மதிப்பு சரிவால், சென்ற நிதியாண்டின் முதல், 11 மாதக் காலத்தில், ஏற்றுமதி செய்யப்பட்ட முந்திரியின் விலை, கிலோ ஒன்றுக்கு, 390.81 ரூபாயாக உயர்ந்துள்ளது. இது, இதற்கு முந்தைய நிதியாண்டின் இதே காலத்தில், 330.41 ரூபாயாக குறைந்து காணப்பட்டது.

வியட்நாம்:சர்வதேச அளவில், முந்திரிக்கான தேவை சுணக்கம் கண்டுள்ளது. இது தவிர, நம் நாட்டுடன் ஒப்பிடும் போது, வியட்நாம் போன்ற நாடுகள், மிக குறைந்த விலையில், உலக நாடுகளுக்கு முந்திரி ஏற்றுமதி செய்கின்றன.மேலும், உள்நாட்டிலும் முந்திரிக்கான தேவை, எதிர்பார்ப்பை விட, சரிவடைந்து உள்ளது. இது போன்ற காரணங்களால், இத்துறையில் ஈடுபட்டு வரும், ஏற்றுமதியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக, இந்த கவுன்சிலின் தலைவர் ஹரி கிருஷ்ணன் ஆர். நாயர் தெரிவித்தார்.

மதிப்பீடு:சீனா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில், முந்திரி பருப்பு பயன்பாடு, மதிப்பீட்டை விட,

வீழ்ச்சி கண்டுள்ளது. இதுவும், ஏற்றுமதியாளர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக உள்ளது.அதேசமயம், பொருளாதார மந்த நிலை காரணமாக, கடந்த மூன்று ஆண்டுகளாக, மேற்கத்திய நாடுகள் முந்திரியை, சராசரி அளவிற்கும், குறைவாகவே பயன்படுத்தி வருகின்றன. இருப்பினும், தென்கிழக்கு ஆசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில், இதற்கான பயன்பாடு சரிவைக் கண்டுள்ளது ஆச்சரியம் அளிப்பதாக உள்ளது என, நாயர் மேலும் கூறினார்.

## 791 மூட்டைகள் மஞ்சள் ரூ.33 லட்சத்துக்கு ஏலம்

ராசிபுரம்: நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில், நேற்று, 791 மூட்டை மஞ்சள், 33 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

ராசிபுரம் அடுத்த நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில், ஒவ்வொரு வாரமும் செவ்வாய் கிழமை மஞ்சள் ஏலம் நடக்கிறது. அதில், 18 தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட, நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் ஏலத்தில் பங்கேற்கின்றனர்.

பல்வேறு மசாலா தயாரிக்கும் நிறுவனங்கள் நேரடியாக வந்து, மஞ்சளை வாங்கி செல்கின்றன. மேலும், வியாபாரிகள் மஞ்சளை ஏலம் எடுத்து, வெளி மாநிலங்களுக்கு விற்பனைக்காக அனுப்பி வைக்கின்றனர். நேற்று நடந்த ஏலத்தில், தலா, 65 கிலோ கொண்ட, 791 மூட்டைகள் விற்பனைக்கு வந்தன.

அதில், விரலி ரகம் அதிக பட்சம் ஒரு மூட்டை, பத்தாயிரத்து, 399க்கும், குறைந்த பட்சம், 7,211 ரூபாய்க்கும் ஏலம் போனது. குண்டு ரகம் அதிக பட்சம், 8,019, குறைந்த பட்சம், 6,929 ரூபாய்க்கு ஏலம் போனது. பனங்காலி ரகம் அதிக பட்சம், 17 ஆயிரத்து, 899, குறைந்த பட்சம், 11 ஆயிரத்து, 399 ரூபாய்க்கு விற்பனையானது. நேற்று நடந்த ஏலத்தில், 33 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் விற்பனையானது.

## கொல்லிமலை பலா மரங்களில் கொத்து கொத்தாக காய் பிடிப்பு

சேந்தமங்கலம்: கொல்லிமலை பகுதியில் உள்ள பலா மரங்களில், கொத்து கொத்தாக காய் பிடிப்பு துவங்கி உள்ளது.

சேந்தமங்கலம் அடுத்த கொல்லிமலையில், அன்னாசி, மா, பலா, கொய்யா போன்ற பழவகைகள் சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு விளைவிக்கப்படும் பழங்கள் அறுவடை செய்து, வாரச்சந்தையில் கொண்டு ஏலம் விடுகின்றனர்.

ஏலத்தில் எடுக்கப்படும் பழங்கள் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும், வெளி

மாவட்டங்களுக்கும் விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது. விரைவில் பலா சீஸன் துவங்க உள்ள நிலையில், தற்போது மரங்களில் காய் பிடிப்பு துவங்கி உள்ளது.ஆண்டு தோறும் ஜூலை மாதம் துவங்கும் பலாப்பழம் சீஸன், அக்டோபர் வரை நீடிக்கும். பழத்தின் உற்பத்தியை பொருத்து, அதன் விலையும் நிர்ணயம் செய்யப்படும். தற்போது, பலா மரங்களில் காய் பிடிப்பு துவங்கி உள்ளதால், கொல்லிமலை மற்றும் சுற்று வட்டாரத்தில் உள்ள பலா மரங்களில் காய்கள் கொத்து கொத்தாக காய்த்து தொங்குகிறது.

இது குறித்து வியாபாரிகள் சிலர் கூறியதாவது:

கொல்லிமலை பகுதியில் உள்ள மரங்களில், அதிக அளவில் காய்கள் காய்த்துள்ளது. போதிய மழை பொழிவு இல்லாத நிலையிலும், அதிக அளவு காய் பிடித்துள்ளது.இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## வெண் பன்றி வளர்க்க ஏப்.,16ம் தேதி பயிற்சி

நாமக்கல்: "நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும், 16ம் தேதி வெண் பன்றி வளர்ப்பு குறித்த ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடக்க உள்ளது' என, அதன் ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை:

வெண் பன்றி வளர்ப்பு, பண்ணை அமைப்பு, உணவு ஊட்ட முறை போன்ற பல்வேறு தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

படித்த பட்டதாரி இளைஞர்கள், விவசாயிகள் என, அனைவரும் கலந்து கொள்ளலாம். பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர் வரும், 15ம் தேதிக்குள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்திற்கு நேரில் அல்லது, 04286 - 266244, 266345, 266650 ஆகிய ஃபோன் எண்களில் தொடர்பு கொண்டு பெயர் பதிவு செய்து கொள்ளலாம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மேட்டூர் அணை நீர்திறப்பு: 600 கனஅடியாக உயர்வு

மேட்டூர்: மேட்டூர் அணையில் இருந்து, குடிநீருக்கான நீர்திறப்பு, நேற்று காலை வினாடிக்கு, 600 கனஅடியாக அதிகரிக்கப்பட்டது.மேட்டூர் அணையில் இருந்து டெல்டா மாவட்ட குடிநீர் தேவைக்காக காவிரியாற்றில் வினாடிக்கு, 500 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டது.

கோடைவெயில் தாக்கம் அதிகரித்துள்ளதால், அதற்கேற்ப காவிரி கரையோர மாவட்டங்களில் குடிநீருக்கான தேவை அதிகரித்துள்ளது.இதனால், நேற்று காலை மேட்டூர் அணை நீர்திறப்பு

வினாடிக்கு, 600 கனஅடியாக அதிகரிக்கப்பட்டது. நேற்று அணை நீர்மட்டம், 26.240 அடியாகவும், நீர் இருப்பு, 6.112 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. வினாடிக்கு, 84 கனஅடி நீர் வந்து கொண்டிருந்தது.

## கூட்டுறவு சங்கத்தில் குவிந்த புது மஞ்சள் குவிண்டாலுக்கு ரூ.550 விலை உயர்வு

சேலம்: சேலம், பள்ளப்பட்டி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்துக்கு புது மஞ்சள் வரத்து அதிகரித்துள்ளது. மேலும், குவிண்டாலுக்கு, 550 ரூபாய் விலை உயர்ந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

சேலம், பள்ளப்பட்டியில் உள்ள சேலம் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், தினமும் மஞ்சள் ஏலம் நடந்து வருகிறது. நேற்று நடந்த ஏலத்தில், சேலம் மாவட்டத்துக்குட்பட்ட காமலாபுரம், கருப்பூர், வெள்ளாளப்பட்டி, வாழப்பாடி, குறிச்சி மற்றும் பெரம்பலூர், சின்ன சேலம் பகுதியை சேர்ந்த விவசாயிகள் புது மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். சேலம், ஈரோட்டை சேர்ந்த மஞ்சள் வியாபாரிகள் போட்டி போட்டுக்கொண்டு மஞ்சளை வாங்கி சென்றனர்.

இது குறித்து வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க அதிகாரிகள் கூறியதாவது:

நேற்று நடந்த ஏலத்துக்கு, 500 மூட்டை புது மஞ்சள் வரத்தானது. ஒரு குவிண்டால் விரளி மஞ்சள் அதிகபட்சமாக, 9,097 ரூபாய்க்கும், குறைந்தபட்சமாக, 7,899 ரூபாய்க்கும் விற்பனையானது. குண்டு மஞ்சள் ஒரு குவிண்டால் குறைந்தபட்சமாக, 6,750 ரூபாய், அதிகபட்சமாக, 7,899 ரூபாய்க்கும் விற்பனையானது. பனங்காலி மஞ்சள் ஒரு குவிண்டால் குறைந்தபட்சமாக, 13 ஆயிரத்து, 599 ரூபாய், அதிகபட்சமாக, 16 ஆயிரத்து, 399 ரூபாய்க்கும் விற்பனை நடந்தது. விரளி மஞ்சள் கடந்த வாரம் ஒரு குவிண்டால், 8,550 ரூபாய்க்கு விற்பனையானது. இந்த வாரம் ஒரு குவிண்டாலுக்கு, 550 ரூபாய் அதிகம் விலை போனதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். நேற்று ஒரே நாளில், 25 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் விற்பனையானது. கடந்த வாரம், 350 மஞ்சள் மூட்டைகள் வரத்தானது. நேற்று, 500 மூட்டை மஞ்சள் வரத்தானது. வரத்து அதிகரித்த போதிலும், விலை அதிகம் கிடைத்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

## உழவர் பெருவிழாவில் அதிகளவில் விவசாயிகள் பங்கேற்பு :கலெக்டர் அறிவுரை

விழுப்புரம் : உழவர் பெருவிழாவில் அதிக விவசாயிகள் பங்கேற்க செய்ய வேண்டும் என கலெக்டர் சம்பத் பேசினார்.விழுப்புரத்தில் நடந்த உழவர் பெருவிழா 2013-14 குறித்து கருத்தரங்கில், கலெக்டர் சம்பத் தலைமை தாங்கி பேசியதாவது:விழுப்புரம் மாவட்டத்திலுள்ள ஆயிரத்து 490 வருவாய் கிராமங்களிலும் வரும் சித்திரை 1ம் தேதி முதல் 30 நாட்களுக்கு உழவர் பெருவிழாவை சிறப்பாக நடத்த வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள சமுதாயகூடம் உள்ளிட்ட பொது இடங்களில் இந்த விழாவை நடத்த வேண்டும். இதில் விவசாயிகள் அதிகளவில் பங்கேற்க செய்ய வேண்டும்.
உழவர் பெரு விழா வில் அரசின் வேளாண் திட் டங்கள் குறித்து கண்காட்சி அமைக்க வேண்டும். மேலும் கலை நிகழ்ச் சிகள் நடத்தி, வேளாண் திட் டங்களை விளக்கி கூற வேண்டும். விழாவிற்கு அந்தந்தப் பகுதிகளை சேர்ந்த எம்.பி.,- எம்.எல்.ஏ.,க்கள், மாவட்ட கவுன்சிலர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள் உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகளை அழைத்து நடத்த வேண்டும். மேலும் கடந்தாண்டை விட இந்தாண்டு இவ்விழா மாவட்டம் முழுவதும் மிகச் சிறப்பாக நடத்த வேண்டும்.

## போராட்டம்! வறட்சியால் வாடும் பயிரை காப்பாற்ற... கைகொடுக்கும் நடமாடும் ஜெனரேட்டர்

கரூர்: வறட்சியில் வாடும் பயிர்களை காக்க, நடமாடும் ஜெனரேட்டர்கள் மூலம் தண்ணீர் பாய்ச்சி விவசாயிகள் போராடி வருகின்றனர்.
கரூர் மாவட்டத்தில் காவிரி ஆற்று பாசன பகுதியான கிருஷ்ணராயபுரம், லாலாபேட்டை, மாயனூர், மணவாசி, குளித்தலை, நச்சலூர், நங்கவரம் உள்ளது. இங்கு, 53 ஹெக்டேர் நிலப்பரப்பில் பயிர் சாகுபடி நடந்து வந்தது. ஆனால் பருவ மழை பொய்த்ததாலும், கர்நாடகம் தண்ணீர் திறக்க மறுத்ததாலும், மேட்டூர் அணையில் நீர்மட்டம், வரலாறு காணத அளவுக்கு குறைந்துள்ளது. இதனால் மேற்கண்ட பகுதிகளுக்கு பாசனத்துக்கு தண்ணீர் கிடைக்கவில்லை. இருப்பினும், 30 ஆயிரம் ஹெக்டேர் நிலத்தில் மட்டும் வெற்றிலை, வாழை, கரும்பு, நெல் ஆகிய பயிர்களை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். அறுவடை செய்யும் தருவாயில் உள்ள வாழை, எள், வெற்றிலை போன்ற பயிர்கள், கடும் வறட்சியின் காரணமாக கருகி வருகின்றன. இதனால் விவசாயிகள் எப்படியும் வாழையை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக போராடி வருகின்றனார். கிணறு மற்றும் ஆழ்துளை கிணறுகளை நம்பி பயிரிட்ட விவசாயிகள், மின் வெட்டு காரணமாக, பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாமல் திணறி வருகின்றனர். தற்போது நடமாடும் ஜெனரேட்டரை வாடகைக்கு எடுத்து, மோட்டார் மூலம் இயங்கி தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர். இதுகுறித்து மாயனூர் பகுதி விவசாயிகள் கூறியதாவது:
முதல்வர் ஜெயலலிதா, சட்டசபையில் டெல்டா பகுதிகளுக்கு, ஆறு மணி நேரம் மின்சாரம்

வழங்கப்படும் என, தெரிவித்தார். விவசாயத்துக்கு தேவையான மும்முனை மின்சாரம் ஒரு நாளைக்கு, மூன்று மணி நேரம் கிடைப்பது அரிதாக உள்ளது. மேலும் இரவு நேரங்களில், ஒரு மணி நேரத்துக்கு, ஒருமுறை மின்வெட்டு செய்யப்படுகிறது.
இதனால் வறட்சியால் கருகும் பயிரை, எப்படியாவது காக்க வேண்டும் என, போராடி வருகிறோம். தற்போது நவீன முறையில் நடமாடும் ஜெனரேட்டர்கள் பயன்படுத்தி வருகின்றோம்.
இந்த நடமாடும் ஜெனரேட்டர், சிறிய வகை டிராக்டருடன் இணைக்கப்பட்டுள்ளது.
இதனால் குறுகலான பகுதிகளுக்கு கூட இந்த ஜெனரேட்டர்களை எடுத்து செல்ல முடியும்.
மேலும், 20 கே.வி., திறன் கொண்ட ஜெனரேட்டர், டிராக்டர் இன்ஜினுடன் சேர்ந்து இயங்கும்படி பொருத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் கிணறு அல்லது போர்வெல் உள்ள மின் மோட்டர்களில் இணைத்து, எளிதில் தண்ணீர் எடுக்க முடிகிறது. ஒரு மணிநேரம் இயக்க, 5 முதல், 6 லிட்டர் வரை, டீஸல் தேவைப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு தண்ணீர் பாய்ச்ச, 6 மணி நேரம் தேவைப்படுகிறது.
மேலும் தொடர் மழையின்மை காரணமாக, நிலத்தடி நீர் மட்டம், அதல பாதாளத்துக்கு சென்று விட்டது. இதனால் கிணறு மற்றும் போர்வெல்களில் தண்ணீர் எடுப்பது காலதாமதமாகிறது.
நடமாடும் ஜெனரேட்டர்களுக்கு ஒரு நாளைக்கு, 1,500 ரூபாய் வாடகை வசூலிக்கப்படுகிறது.
மின் பற்றாக்குறையால் வேறு வழியின்றி இதை பயன்படுத்தி வருகிறோம்.
இவ்வாறு அவர்கள் கூறினர்.

## செந்தூரா மாம்பழ சீஸன் துவக்கம் ரூ.60 ரூபாய்க்கு விற்பனை

ஈரோடு: ஈரோட்டில் மாம்பழ சீஸன் துவங்கிய நிலையில், செந்தூர மாம்பழங்கள் கிலோ, 60 ரூபாய்க்கு விற்பனையாவதால், மாம்பழ வியாபாரிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.
தமிழகத்தில் கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம் மாவட்டத்துக்கு அடுத்தபடியாக, அதிக மாங்காய் சாகுபடியில், ஈரோடு மாவட்டம் உள்ளது. ஈரோடு மாவட்டத்தில் இருந்து பல்வேறு மாவட்டத்துக்கு, மாங்காய்கள் ஏற்றுமதியாகிறது.
ஆண்டுதோறும் கோடை காலத்தில் மாங்காய் சீஸன் துவங்குவது வழக்கம். மேலும், ஜனவரியில் மா மரங்கள் பிஞ்சுகள் வைத்து, ஃபிப்ரவரியில் மாங்காய் சாகுபடி செய்யப்படும். ஆனால், இந்த ஆண்டு கால நிலை மாற்றத்தால், மா மரங்கள் காலதாமதமாக மா பிஞ்சுகள் வைத்ததால், மார்ச் இறுதியில் சாகுபடி செய்யப்பட்டு, இம்மாதம் விற்பனைக்கு வந்துள்ளது.
இதுகுறித்து மாம்பழ வியாபாரி செரீஃப் கூறியதாவது:
ஆண்டுதோறும் ஜனவரியில் காய் வைத்து, ஃபிப்ரவரியில் சாகுபடி செய்யப்பட்டு, மார்ச் மாத துவக்கத்தில் மாங்கனிகள் விற்பனைக்கு வரும். இந்தாண்டு, பருவமழை பொய்த்ததால், மாமரத்தில் காய் பிடிப்பது தாமதமானது. மேலும், கொளுத்தும் வெயிலால், மா பிஞ்சுகள் உதிர்ந்து, காய்பிடிக்காமலும் போனது.
இந்நிலையில், ஈரோட்டுக்கு தாமதமாக செந்தூரா மாம்பழங்கள் விற்பனைக்கு கொண்டு

வரப்பட்டுள்ளது. ஒரு கிலோ, 60 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. சில வாரத்தில், மற்ற மாம்பழ வகைகளும் விற்பனைக்கு வரும் என எதிர்பார்க்கிறோம், என்றனர்.

## விளைச்சல் அமோகம் வறட்சியிலும் கேரட் சாகுபடியில்... மகசூல் அதிகரிப்பால் மகிழ்ச்சி

ஓசூர்: ஓசூர் தாலுகாவில் வறட்சியிலும், கேரட் விளைச்சல் அதிகரித்து இருப்பதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவில், 10 ஆயிரம் ஹெக்டேரில் காய்கறி சாகுபடி நடக்கிறது. ஓசூர் பகுதியில் மட்டும், ஐந்து ஆயிரம் ஹெக்டேரில் காய்கறி சாகுபடி நடக்கிறது. இவற்றில் 3,000 ஏக்கரில் உயர் தொழில் நுட்ப சொட்டு நீர் பாசனத்தில் காய்கறி சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

பாகலூர், ஓசூர், பேரிகை, தொரப்பள்ளி, பேளகொண்டப்பள்ளி உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதியில் விவசாயிகள் 300 ஹெக்டேரில் ஆண்டு முழுவதும் கேரட் சாகுபடி செய்கின்றனர். கேரட்டை பொறுத்தவரையில் சாகுபடி செய்த, 65வது நாளில் அறுவடை செய்து விடலாம். ஏக்கருக்கு, 10 டன் விளைச்சல் கிடைக்கிறது. கேரட் சாகுபடி செய்ய, 50 ஆயிரம் ரூபாய் வரை பராமரிப்பு செலவாகிறது. பராமரிப்பு செலவு போக ஏக்கருக்கு, 50 ஆயிரம் ரூபாய் முதல், 60 ஆயிரம் ரூபாய் வரை குறுகிய காலத்தில் வருமானம் கிடைக்கிறது.

குறைந்த நீர் பாசனம், குறைந்த முதலீட்டில் கூடுதல் லாபம் கிடைப்பதால், ஓசூர் தாலுகாவில் விவசாயிகள் கேரட் சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். கடந்த இரண்டு ஆண்டாக ஓசூர் பகுதியில் பருவ மழைகள் குறைந்த நிலையில் விவசாயிகள் குறைந்த நீர் பாசனம் தேவைப்படும் கேரட் சாகுபடியில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

ஓசூர் சுற்று வட்டார பகுதியில் தற்போது கேரட் அறுவடை முழு வீச்சில் நடக்கிறது. மழை பெய்தால் கேரட் அழுகிவிடும் என்பதால், கோடை மழைக்கு முன்பாக கேரட் முழுவதையும் அறுவடை செய்யும் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

வட மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் கேரட்டை பயன்படுத்தி, பல்வேறு வகை உணவுகள் தயார் செய்யப்படுகிறது. கேரட் ஜூஸ், கேரட் அல்வா, கேரட் சூப், கேரட் பொறியல், கேரட் கூட்டு மற்றும் பல்வேறு வகை மருந்துகள் தயாரிக்க கேரட் பயன்படுகிறது. அதனால், ஆண்டு முழுவதும் கேரட் தேவை அதிகரித்துள்ளது.

தற்போது, நாடு முழுவதும் வறட்சி காணப்படுவதால், கேரட்டுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதனால், ஓசூர் பகுதியில் உற்பத்தியாகும் ஒட்டு மொத்த கேரட்டும் வெளிமாநிலங்களுக்கு லாரிகள் மூலம் டன் கணக்கில் தினசரி ஏற்றுமதியாகிறது.

அறுவடை செய்யப்படும் கேரட்டுகள், மண் படிந்து அழுக்காக காணப்படுகிறது. அவற்றை தொழிலாளர்கள் தண்ணீர் பீச்சியடித்தும், கழுவியும் சுத்தம் செய்து ஏற்றுமதி செய்கின்றனர்.

இவற்றில் முதல் ரக கேரட்டுகளை வெளிமாநிலங்கள், வெளிநாட்டுக்கு வியாபாரிகள் ஏற்றுமதி செய்கின்றனர்.
இரண்டாம் ரக, மூன்றாம் ரக கேரட்டுகளை மட்டும் உள்ளூர் சந்தைகளில் விற்பனைக்கு அனுப்புகின்றனர்.
இதுகு றித்து ஓசூர் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் சீனிவாசன் கூறுகையில், ""தற்போது ஒரு கிலோ கேரட். 15 ரூபாய் முதல், 20 ரூபாய் வரை விற்பனையாகிறது. டன், 15 ஆயிரம் ரூபாய் முதல், 20 ஆயிரம் ரூபாய் விற்பனையாகிறது. மேலும், கேரட் வறட்சியை தாங்கி வளரக்கூடியது என்பதால், ஓசூர் பகுதியில் விவசாயிகள் விரும்பி சாகுபடி செய்கின்றனர், " என்றார்.

## மேல வண்ணாயிருப்பில் வறட்சியிலும் நெல் நடவு

சிங்கம்புணரி: சிவகங்கை மாவட்டத்தில் கடந்த ஆண்டு மழையில்லாததால் அனைத்து இடங்களிலும் கடும் வறட்சி நிலவுகிறது. எஸ்.புதூர் ஒன்றியம்,மேலவண்ணாயிருப்பு கிராமத்தில் மட்டும் விவசாயம் செழித்து விளங்குகிறது.இப்பகுதியில் கடந்தாண்டு மழையின்றி பல கிராமங்களில் உள்ள கண்மாய்,குளங்கள் வறண்டு கிடக்கின்றன. மலைக் கிராமமான மேல வண்ணாயிருப்பில் மட்டும் கிணறு,ஆழ்குழாய் கிணறு மூலம் கிடைக்கும் தண்ணீரை வைத்து விவசாயிகள்,கத்தரி, தக்காளி,வெண்டை விளைவிக்கின்றனர்.இயற்கை வளம்மிக்க இக்கிராமத்தில் கடும் கோடை நிலவும் நிலையில் நெல்லையும் நடவு செய்துள்ளனர்.

## கோடை மழை கைகொடுக்கும் என விவசாயிகள் நம்பிக்கை


திண்டுக்கல்:பிப்ரவரி, மார்ச் மாதங்களில் சென்ற ஆண்டைவிட அதிக மழை பொழிவு இருந்ததால், வரும் மாதங்களில் மழை அதிகம் இருக்கும் என்ற எதிர்பார்ப்பு விவசாயிகளிடம் ஏற்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் தென்மேற்கு பருவமழை ஏமாற்றத்தை தந்தது. இதனால் மழையை நம்பி ஆடிப்பட்டத்தில் தேடி விதைத்த விவசாயிகள் பாதிப்புக்குள்ளாகினர். அடுத்துவந்த வடகிழக்கு பருவமழையாவது பயிர்களை காப்பாற்றும் என்று நம்பிய விவசாயிகளுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. வடகிழக்கு பருவமழை பொய்த்ததால் மானாவாரி விவசாயிகள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகினர். தொடர் விவசாயம் செய்யமுடியாத நிலையில் சாகுபடி செய்வதை விட்டுவிட்டு பலர் விளைநிலங்களை தரிசாக வைத்துள்ளனர். பருவமழைகள் ஏமாற்றியதால் குடிநீர் பஞ்சமும் தற்போது அதிகரித்துள்ளது.

இந்நிலையில் இந்த ஆண்டு ஜனவரியில் மழை பொழிவு இல்லாதபோதும், பிப்ரவரியில் 21.68 மி.மீ., மழைபதிவாகியது. கடந்த ஆண்டு பிப்ரவரியில் 0.2 மி.மீ., மட்டுமே பதிவாகியது.இந்த ஆண்டு மார்ச் ல் 29.88 மி.மீ., மழை பதிவாகியது. சென்ற ஆண்டு மார்ச் மாதம், 3 மி.மீ., மட்டுமே

பதிவாகியது. இந்த ஆண்டு துவக்கத்தில் மழை அளவு அதிகரித்திருப்பதால் வரும் மாதங்களிலும் மழை பொழிவு அதிகம் இருக்கும் என்ற நம்பிக்கை விவசாயிகளிடம் உள்ளது. வெயிலின் தாக்கம் அதிகம் இருப்பதால் ஏப்., மே ல் கோடைமழை கைகொடுக்கும் என்ற எதிர்பார்ப்பும் உள்ளது.

# விவசாய மலர்

### தென்னையில் ஊடுபயிராக கோகோ



ஒரு ஏக்கருக்கு ரூ.40 ஆயிரம் உபரி வருமானம்கொட்டாம்பட்டி ஒன்றியத்தில் பெரும்பாலான விவசாயிகள் தென்னை விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். சமீப காலமாக தென்னையில் ஊடுபயிராக கோகோ பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தோட்டக்கலைத் துறையிலிருந்து விவசாயிகளுக்குத் தேவையான கோகோ செடிகள் மற்றும் இரண்டு ஆண்டுகளுக்கு தேவையான உரங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. வாரம் ஒருமுறை தென்னைக்குத் தண்ணீர் பாய்ச்சும்போது, அந்த தண்ணீரே இதற்கும் போதுமானதாக இருப்பதால், கோகோவிற்கு தனியாக தண்ணீர் பாய்ச்சத் தேவையில்லை.

செடி நட்ட மூன்றாம் ஆண்டு ஆரம்பத்தில், காய் காய்க்க ஆரம்பிக்கும். முதல் ஆண்டில் ஒரு

மரத்திற்கு அரை கிலோ விதை கிடைக்கும். நான்காம் ஆண்டில் இருந்து ஒரு மரத்திலிருந்து 2 கிலோ விதை எடுக்கலாம். ஒரு மரம் 35 முதல் 40 வருடம் வரை பலன் கொடுக்கும். ஒரு ஏக்கரில் 200 மரக் கன்றுகள் நடலாம்.

**விவசாயி சுப்பையா:** 3 ஏக்கரில் தென்னையில் ஊடுபயிராக கோகோ பயிரிட் டுள்ளேன். காய் பெருத்து மஞ்சள் நிறமாக மாறியஉடன் அவற்றை சேகரித்து வைப்பேன். சாக்லேட் நிறுவனத்திலிருந்து கிலோ ரூ.130க்கு கோகோ விதைகளை நேரடியாக கொள்முதல் செய்கின்றனர். இதனால், வியாபாரிகளைத் தேடி அலையவேண்டிய நிலை இல்லை. அதிக உழைப்பில்லாமல் உபரியாக ஏக்கருக்கு ரூ.40 ஆயிரம் வருமானம் ஈட்ட முடிவதால், பெரும்பாலான தென்னை விவசாயிகள் கோகோவை ஊடுபயிராக பயிரிட ஆர்வம் காட்டுகின்றனர்.

**சாக்லேட் நிறுவன ஊழியர் மாரிமுத்து:** கோகோ விதைகளை காயவைத்து உருவாக்கப்படும் பவுடர், கேக், ஐஸ்கிரீம், சாக்லேட், ஆரோக்கிய பானங்கள் தயாரிப்பில் சேர்க்கப் படுகிறது. மதுரையில் அலங்கா நல்லூர், கொட்டாம்பட்டி பகுதிகளில், கோகோ பயிரிட விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். தென்னை, பாக்கு, எண்ணெய்ப்பனை ஆகியவற்றில் ஊடுபயிராக கோகோவைப் பயிரிடலாம். பயிரிட ஆர்வம் உள்ள விவசாயிகள் அந்தந்தப் பகுதி தோட்டக்கலைத்துறை அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளலாம் என்றனர்.

**மேலும் விபரம் அறிய:** 9976583929.

## நவீன தொழில்நுட்பம்



கோடை இறவை நெல்தரிசு பகுதிகளுக்கேற்ற பருத்தி எஸ்.வி.பி.ஆர்.4: தமிழகத்தில் கோடையில் குறைந்த பரப்பளவான 40,000 எக்டரில் மட்டுமே பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது. இருப்பினும் நெல்தரிசு பகுதிகளில் கோடையில் பருத்தி சாகுபடி செய்யும் பரப்பளவு அதிகரிக்க வாய்ப்புள்ளது. தற்போது பல ஒட்டு ரகங்கள் மற்றும் பி.டி. ஒட்டு ரகங்கள் வெளியிடப்பட்டு இருந்தாலும் கோடைப்பட்டத்திற்கு ஏற்ற உயர் விளைச்சல் தரக்கூடிய ஒட்டு ரகங்கள் இல்லை. தற்போது கோடை இறவை பட்டத்தில் எஸ்.வி.பி.ஆர்.2 ரகமும், நெல் தரிசு பருத்தியில் குறுகிய கால எம்.சி.யு.7 மற்றும் எஸ்.வி.பி.ஆர்.3 ரகங்கள் மட்டுமே நடப்பு சாகுபடியில் உள்ளன. கோடை இறவைப்பட்டத்தில் பி.டி. ஒட்டு ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டாலும் சராசரி மகசூலைவிட

குறைவாகவே உள்ளது. அதற்கு முக்கிய காரணம் கோடையில் தத்துப்பூச்சி தாக்குதல் அதிகமாக இருப்பதாலும் பூக்கும் சமயம் அதிக இரவு நேர வெப்பம் (>27 டிகிரி செல்சியஸ்) இருப்பதாலும் இவற்றைத் தாங்கி வளரக்கூடிய தன்மை தற்போதைய பி.டி.ரகங்களில் இல்லை. நடப்பு சாகுபடியில் உள்ள எம்.சி.யு.7, எஸ்.வி.பி.ஆர்.2 மற்றும் எஸ்.வி.பி.ஆர்.3 ரகங்கள் நல்ல மகசூலைக் கொடுத்தாலும் இந்த ரகங்களின் பஞ்சு தற்போதைய பெரும்பாலான மில் தேவையான 40ம் நம்பர் நூல் நூற்க ஏற்றதாக இல்லை. எனவே 40ம் நம்பர் நூல் நூற்கவல்ல கோடை இறவைப் பட்டத்திற்கேற்ற ரகங்களை உருவாக்கும் பட்சத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலையம் எஸ்.வி.பி.ஆர்.4 என்ற உயர்தர நடுத்தர இழை நீளம் (27.8 மி.மீ) கொண்ட உயர் விளைச்சல் பருத்தி ரகத்தை 2009ம் ஆண்டு வெளியிட்டுள்ளது. இந்த ரகம் நடப்பு சாகுபடியில் உள்ள எஸ்.வி.பி.ஆர்.2, எஸ்.வி.பி.ஆர்.3 மற்றும் எம்.சி.யு.7 ரகங்களைவிட அதிக விளைச்சல் தருவதுடன் பூச்சி மற்றும் வறட்சியைத் தாங்கும் தன்மையைக் கொண்டுள்ளதால் சராசரியாக எக்டருக்கு 20 குவிண்டால் பருத்தி விளைச்சல் கொடுக்கிறது. எனவே கோடை இறவை மற்றும் நெல் தரிசு பருத்தி விவசாயிகள் எஸ்.வி.பி.ஆர்.4 ரகத்தை பயிரிடுவதன் மூலம் அதிக வருமானம் பெறலாம்.

**சிறப்பம்சங்கள்:** எஸ்.வி.பி.ஆர்.4 பருத்தி நீண்ட இழை நீளம் கொண்ட உயர்விளைச்சல் ரகமான எம்.சி.யு.5 ரகத்துடன் பூச்சி மற்றும் வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய 4727 ரகத்தை கரு ஒட்டுச்சேர்த்து உருவாக்கப்பட்டது. நடுத்தர வயதுடைய இந்த பருத்தி ரகம் 150 நாட்களில் விளையக்கூடியது.

எஸ்.வி.பி.ஆர்.4 எக்டருக்கு சராசரியாக 1583 கிலோ பருத்தியும் அதிகபட்சமாக 3772 கிலோ பருத்தியும் கொடுத்துள்ளது. மறுதழைவிற்கு ஏற்றதாக இருப்பதால் முதல் அறுவடை 150 நாட்களில் முடிந்தவுடனும் காவிரி டெல்டா பாசனப்பகுதிகளில் குறுவை நீர்வரத்து இல்லாதபோதும் ஒருபோக சம்பா பாசன பகுதிகளிலும் மறுதழைவிற்கு விட்டு இரண்டாம் அறுவடையில் எக்டருக்கு 1000 கிலோ பருத்தி மகசூல் கிடைக்கிறது. இதனால் குறைந்த செலவில் அதிக வருமானம் கிடைக்கிறது.

எஸ்.வி.பி.ஆர்.4 ரகம் 36.2 சதம் அறவைத்திறன் கொண்டது. பருத்தி இழையின் மற்ற குணங்களான நிறம், இழை, வலிமை ஆகியன எம்.சி.யு.5 ரகத்தை ஒப்பிடும் வகையில் உள்ளதால் நல்ல விலை கிடைக்கிறது. எஸ்.வி.பி.ஆர்.4 ரகம், எஸ்.வி.பி.ஆர்.2 ரகத்தைப் போல் ஓங்கி வளர்ந்து ஒன்று அல்லது இரண்டு செடி கிளைகளும் 16-20 காய் கிளைகளும், கிளைக்கு 5-7 காய்களும் கொண்டது.

நன்கு வறட்சியைத் தாங்கும் தன்மை கொண்டுள்ளதால் கோடைகாலத்தில் நிலவும் அதிக வெப்பத்தைத் தாங்கி வளர்வதுடன் சப்பைகள், காய்கள் அதிகம் உதிராமல் நிறைய காய்கள் பிடிக்கின்றன. தத்துப்பூச்சிக்கு மிதமான எதிர்ப்பு சக்தி கொண்டது. கடந்த 2 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட தேசிய செயல் விளக்கத் திடல்கள் மானாவாரியில் சராசரியாக எக்டருக்கு 1600-1800 கிலோவும் கோடை இறவை மற்றும் நெல் தரிசு பருத்தி பகுதிகளில் எக்டருக்கு 2200-2400 கிலோ பருத்தி மகசூலும் தந்துள்ளது. இதனால் கோடை இறவைப்பருத்தி சாகுபடி செய்யும் பகுதிகளில் பருத்தி சாகுபடி பரப்பளவு அதிகரிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

**சாகுபடி பருவம்:** பிப்ரவரி முதல் ஜூலை வரை (கோடை இறவை); விதையளவு-10 கிலோ எக்டருக்கு. நடவு இடைவெளி 75x30 செ.மீ. நீர்ப்பாசனம்- விதைத்தவுடன் ஒரு முறையும் பின்னர் வெப்பநிலைக்கேற்ப 10-15 நாட்களுக்கு ஒரு முறையும் நீர் பாய்ச்ச வேண்டும்.

(தகவல்: முனைவர் ஏ.ராமலிங்கம், எம்.ஞானசேகரன், எம்.சூரியசந்திரசெல்வம், பருத்தி ஆராய்ச்சி நிலையம், ஸ்ரீவில்லிபுத்தூர்-626 125. போன்: 04563-250 736.)

**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்**

## சீரகம் சாகுபடி



சீரகம் ஒரு மருத்துவ மூலிகையாகும். வட இந்தியாவில் மலைப்பகுதிகளில் அதிகம் பயிர் செய்யப்படுகிறது. தமிழகத்தில் மேட்டுப்பாங்கான இடங்களிலும் மலைப்பகுதிகளிலும் பயிர் செய்யப்படுகிறது. காய்ந்த விதைகளே சீரகம் எனப்படும்.

**ரகங்கள்:** கோ.1 மற்றும் கோ.2.

**மண் மற்றும் தட்பவெப்ப நிலை:** ஆழமான வடிகால் வசதியுள்ள அங்ககப் பொருட்கள் நிறைந்த மண்ணில் நன்கு செழித்து வளரும். குளிர்ந்த தட்பவெப்பநிலையில் நன்கு வளரும். கடல் மட்டத்திலிருந்து 3000 மீட்டர் வரை பயிர் செய்யலாம்.

**பருவம்:** மலைப்பகுதிகளுக்கு: மே - ஜூன்; சமவெளிப்பகுதிகளுக்கு: அக்டோபர்- நவம்பர் அதிக

மழை பெய்யும் காலங்களில் பயிர் செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

**விதையும் விதைப்பும்:** நேரடி விதைப்பதற்கு எக்டருக்கு 9-12 கிலோ நாற்று விட்டு நடவு செய்ய 3-4 கிலோ, ஒரு எக்டர் நடவு செய்ய நாற்றங்காலுக்கு 100 சதுர மீட்டர் அளவுள்ள பரப்பு தேவை. தேவைக்கேற்ப மேடைப்பாத்திகள் அமைத்து, விதைகளை பாத்திகளின் மேல் சீராகத்தூவி, கைக்கொத்தியால் மண்ணுடன் நன்கு கலக்கச்செய்ய வேண்டும். விதைகள் முளைக்க 5 முதல் 9 நாட்கள் ஆகும்.

**நடவு:** 5-6 வாரங்கள் ஆன நாற்றுக்களைப் பிடுங்கி 60 து 30 செ.மீ. இடைவெளியில் நடவேண்டும்,

நீர் நிர்வாகம்: விதைத்தவுடன் நீர் பாய்ச்ச வேண்டும். பின் 3 முதல் 4 நாட்கள் இடைவெளியில் நீர் பாய்ச்ச வேண்டும். பின் மண்ணின் ஈரப்பதத்தைப் பொறுத்து 7 முதல் 15 நாட்கள் இடைவெளியில் நீர்பாய்ச்ச வேண்டும்.

**ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை:** அடியுரமாக எக்டருக்கு தொழு உரம் 10 டன்கள், 25 கிலோ தழைச்சத்து, 10 கிலோ மணிச்சத்து கொடுக்கக்கூடிய ரசாயன உரங்களை இடவேண்டும்.

**மேலுரம்:** செடிகள் பூ விடும் தருணத்தில் எக்டருக்கு 25 கிலோ தழைச்சத்து கொடுக்கக்கூடிய ரசாயன உரங்களை இடவேண்டும்.

பயிர்- இடவேண்டிய சத்துக்கள் (கிலோ) - இப்கோ, டிஏபி, யூரியா இடவேண்டிய அளவு (கிலோ)

சீரகம் - அடியுரம் - தழை25 - மணி10 - சாம்பல்0 - டிஏபி22 - யூரியா46

சீரகம் - மேலுரம் - தழை25 - மணி0 - சாம்பல்0 - டிஏபி0 - யூரியா55

**களைக்கட்டுப்பாடு மற்றும் பின்செய் நேர்த்தி:** களைகள் முளைக்கும் முன் எக்டருக்கு ஒரு லிட்டர் பெண்டிமித்திலின் களைக்கொல்லி தெளிக்க வேண்டும். பின் இரண்டு அல்லது மூன்று முறை கைக்களை எடுக்க வேண்டும். 3வது மாதத்தில் செடிகளுக்கு மண் அணைக்க வேண்டும்.

ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு: அசுவினிப்பூச்சி: இப்பூச்சியைக் கட்டுப்படுத்த டைமித்தோயேட் 30இசி 2மில்லி அல்லது மீதைல் டெமட்டான் 25 இசி 2 மில்லி மருந்துடன் ஒரு லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்க வேண்டும்.

**சாம்பல் நோய்:** நோயின் அறிகுறிகள் தென்பட்டவுடன் எக்டருக்கு 25 கிலோ தூவும் கந்தகம் மருந்தை உபயோகிக்க வேண்டும்.

**அறுவடை:** பயிர் 7-8 மாதத்திற்குள் அறுவடைக்கு தயாராகிவிடும். 10-15 நாட்கள் இடைவெளியில் காய்ந்த பூங்கொத்துகளை அறுவடை செய்ய வேண்டும். பின் இவற்றை வெயிலில் 4-5 நாட்கள் உலர்த்தி, பின் குச்சியில் தட்டி விதைகளைத் தனியாகப் பிரித்து எடுக்க

வேண்டும்.

**மகசூல்:** எக்டரிலிருந்து 500-750 கிலோ விதைகள் ஒரு வருடத்திற்கு.

**-அகமது கபீர், தாராபுரம், 89037 57427.**

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**10.04.2013 A.M**

---

## மேட்டூர் அணையில் குடிநீருக்காக தண்ணீர் திறப்பு



மேட்டூர்: காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாததால் மேட்டூர் அணைக்கு குறைவான அளவு தண்ணீரே வந்து கொண்டிருக்கிறது. நேற்று காலை அணைக்கு விநாடிக்கு 84 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. திருச்சி, கரூர், நாமக்கல், ஈரோடு மாவட்டங்களின் குடிநீர் தேவைக்கு மேட்டூர் அணையில் இருந்து தினமும் விநாடிக்கு 500 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு வந்தது. இந் நிலையில் நேற்று காலை ஆறு மணி முதல் தண்ணீர் திறப்பு விநாடிக்கு 600 கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. கோ டை காலம் என்பதால் குடிநீருக்கான தேவை

அதிகரித்துள்ளதால் தண்ணீர் திறப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. அணைக்கு நீர் வரத்து குறைவாக உள்ள நிலை யில், கூடுதல் தண்ணீர் வெளியேற்றப்படுவதால் அணையின் நீர்மட்டம் குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. நேற்று கா லை 8 மணி நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 26.24 அடியாக இருந்தது. நீர் இருப்பு 6.11 டிஎம்சி.

## பண்ணை குட்டை அமைக்க விவசாயிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்பு

தர்மபுரி, : தர்மபுரி மாவட்டத்தில் பண்ணை குட்டை யினை தங்களது நிலங்களில் அமைக்க விருப்பம் உள்ள விவசாயிகள் வேளா ண்மை துறை அலுவலங்களில் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தர்மபுரி மாவட்ட ஆட்சியர் லில்லி செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது: மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் நிலங்களிலும் மற்றும் குறு, சிறு விவசாயி நிலங்களிலும் புதிய பண்ணை குட்டை அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. பண்ணை குட்டை அமைப்பதால் மழைநீர் சேகரிக்கப்படுவதுடன் நிலத்தடிநீர் மட்டம் உயரவும் கால்நடைகளுக்கு குடிதண்ணீர் கிடைப்பதற்கும் வாய்ப்புள்ளது.

பண்ணை குட்டை ஒவ்வொன்றும் 25மீ நீளம் 20மீ அகலம் 2மீ ஆழத்தில் (1000 கனமீட்டர் தண்ணீர் தேங்கும் அளவில்) அமைக்கப்பட உள்ளது. மண்ணின் தன்மைக்கேற்ப இதற்கான மதிப்பீட்டு தொகை ரூ1.500 லட்சத்திற்கு மிகாமல் செயல்படுத்தப்பட உள்ளது. இப்பணியினை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பயனாளிகளை கொண்டு மேற்கொள்ளப்படவுள்ளது. பண்ணை குட்டை யினை தங்களது நிலங்களில் அமைக்க விருப்பம் உள்ள விவசாயிகள் தங்களது விண்ணப்பங்களை சம்மந்தப்பட்ட வட்டாரத்தில் உள்ள உதவி இயக்குனர் வேளாண்மைத்துறை அலுவலகத்திலோ அல்லது மாவட்ட அளவில் உள்ள வேளாண்மைத்துறை அல்லது வேளாண்மை பொறியியல்துறை அலுவலகத்திலோ அளிக்கலாம். மேலும் இலவச தொலைபேசி எண் 1299ல் தொடர்புகொண்டு தகவல் கூறலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மக்கள் குறைதீர் கூட்டத்தில் நாட்டுக்கோழி வளர்க்க நிதியுதவி

கரூர், : கரூர் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்குள் நாள் கூட்டத்தில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை கலெக்டர் ஜெயந்தி வழங்கினார்.

கரூர் கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர் நாள் கூட்டம் நேற்று நடைபெற்றது. மாவட்ட கலெக் டர் ஜெயந்தி தலைமை வகித்தார்.

இந்த கூட்டத்தில், மக்களிடம் இருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்ட கலெக்டர், சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது நடவடிக்கை எடுத்திட

உத்தரவிட்டார். தொடர்ந்து, நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில், கரூர் வட்டத்தின் சார்பில் 21 மாற்று திறனாளிகளுக்கு மாதந்தோறும் உதவித்தொகையாக ரூ.1000 பெறுவதற்கான ஆணையை, கிருஷ்ணராயபுரம் வட்டத்தின் சார்பில் 18 பயனாளிகளு க்கு முதியோர் உதவித் தொகை மற்றும் ஏனைய உதவித்தொகைக்கான ஆணைகளை கலெக்டர் ஜெயந்தி வழங்கினார்.

தொடர்ந்து, அரவக்குறிச்சி வட்டத்தை சேர்ந்த 3 பெண்களுக்கு குடும்பத்தலைவர் இறப்பு நல நிதியாக தலா ரூ.10 ஆயிரத்திற்கான காசோலை, கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் 4 பயனாளிகளுக்கு நாட்டுக்கோழி வளர்ப்பு திட்டத்திற்கு தலா ரூ.1லட்சத்து 17ஆயிரம் மானியக் கடனாகவும், வறட்சி நிவாரணம் சோளம் வழங்கும் திட்டத்தின்கீழ் 4 பயனாளிகளுக்கு தலா ரூ.13,600 மதிப்பில் விதைகளையும் கலெக்டர் பயனாளிகளுக்கு வழங்கினார்.

இதில் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) டாக்டர் வினய், கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர் குழந்தைசாமி, தீவன அபிவிருத்தி அலுவலர் பிரின்ஸ் கிளைமெண்ட், சமூக பாதுகாப்புத்திட்ட வட்டாட்சியர்கள் உட்பட அனைத்து துறை அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

## மானியத்துடன் கூடிய தீவன பயிர் உற்பத்தி திட்டம் அறிமுகம் விவசாயிகளுக்கு கலெக்டர் அழைப்பு

கரூர், : வறட்சி நிவா ரண தீவன அபிவிருத்தி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதில் விவசாயிகள் பயனடையலாம் என்று கலெக்டர் ஜெயந்தி அழைப்பு விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது,

கரூர் மாவட்டம் கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு இந்த பகுதி விவசாயிகள் பயன்பெறும் வகையில் கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் மானியத்துடன் கூடிய தீவன பயிர் உற்பத்தி செய்யும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

அதன்படி, கரூர் மாவட்டத்தில் 648 விவசாயிகளின் 700 ஏக்கர் நிலத்தில் மிகக்குறைந்த காலத்தில் (60 நாட்கள்) உற்பத்தி செய்யப்படவுள்ள மானாவாரி தீவன சோளம் எம்பி-சாரி தீவன விதைகளை 1 ஏக்கருக்கு 16 கிலோ விதம் 700 ஏக்கருக்கு ஏப்ரல் 4ம் தேதி முதல் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இதன் மூலம் 1 ஏக்கரில் குறைந்தபட்சம் 10 டன் தீவன பயிர் உற்பத்தி செய்ய இயலும். 1 ஏக்கர் சாகுபடி செய்ய உத்தேசமாக ரூ.13 ஆயிரத்து 600 செலவு கணக்கிடப்பட்டு, அதில் 50 சதவீதம் (ரூ.6800) மானியமாக வழங்கப்படவுள்ளது. மேலும், விவசாயிகள் உற்பத்தி செய்யும் தீவனப்பயிர்கள் பசுந்தீவனமாக இருப்பின் கிலோ ரூ.2 என்ற விலையிலும் காய்ந்த தீவனமாக இருந்தால் கிலோ ரூ.10 என்ற விலையிலும் அல்லது அப்போதைய சந்தை நிலவரப்படி அருகில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு

தேவைப்படும் கால்நடை வளர்ப்பவர்களுக்கு 50 சதவீத மானியத்தில் வழங்கப்பட உள்ளது. மேலும், தீவிர அபிவிருத்தி திட்டத்தின்கீழ் பல்லாண்டு தீவன பயிர் ரகங்களான கோ-3, கோ-4 தீவனப் பயிர்கள் சாகுபடி செய்ய 526 ஏக்கர் ஒதுக்கீடு செய்யப்பட்டு, கால் ஏக்கருக்கு ரூ.3 ஆயிரம் வீதம் 100 சதவீத மானியம் வழங்கப்பட உள்ளது. ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 1 ஏக்கர் வரை மானியம் வழங்கப்படும்.

இறவை பாசன வசதியுள்ள ஆர்வமுள்ள விவசாயிகள் இந்த திட்டத்தில் பங்கேற்று மானியத்துடன் கூடிய தீவனப்பயிர் சாகுபடி மூலம் தங்களது கால்நடைகளை வறட்சியில் இருந்து காத்துக் கொள்ள, அருகில் உள்ள கால்நடை மருந்தகங்களில் தங்கள் பெயர் மற்றும் நிலம் சம்பந்தப்பட்ட விவரங்களை பதிவு செய்து கொள்ளலாம். எனவே, கால்நடை வளர்க்கும் விவசாயிகள் தமிழக அரசின் இந்த மானியத்திட்டத்தை பயன்படுத்தி பசுந்தீவன உற்பத்தியை மேற்கொள்ள வேண்டும்.இவ்வாறு கலெக்டர் ஜெயந்தி தெரிவித்துள்ளார்.

## வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும்

கோபி,: கோபி மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் கடந்த இரண்டு ஆண்டுகளாக உள்ள கடும் வறட்சியால்விவசாய விளை பொருள் உற்பத்தியில் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் உரிய இழப்பீடு தொகையை உடனடியாக வழங்க கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஈரோடு மாவட்டத்தில் கோபி மற்றும் அதைசுற்றியுள்ள பகுதிகளில் சுமார் 3 லட்சம் ஏக்கரில் விவசாய விளைபொருள் உற்பத்தியில் விவசாயிகள் ஈடுபட்டு உள்ளனர்.விவசாயம் தவிர அதைச் சார்ந்த தொழில் மற்றும் கால்நடை வளர்ப்பும் அதிகளவில் உள்ளது. இந்த மாவட்டத்தில் விவசாயம் மற்றும் குடிநீர் தேவைக்காக பவானிசாகர் அணையையே பயன்படுத்தி வந்தனர். இந்நிலையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவ மழை பொய்த்ததால் அணையின் நீர்மட்டம் வெகுவாக குறைந்ததுடன், நிலத்தடி நீர் மட்டமும் 1500 அடிக்கும் கீழாக குறைந்துவிட்டது. இதனால் கடந்த ஆண்டு கீழ்பவானி பாசன பகுதியில் முதல் போக சம்பா சாகுபடிக்கும், இரண்டாம் போக நிலக்கடலை சாகுபடிக்கும், தடப்பள்ளி அரக்கன் கோட்டை பாசன பகுதிகளில் இரண்டாம் போக சாகுபடிக்கும் தண்ணீர் திறக்க முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் கடந்த ஆண்டு நெல் உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டது.

கடந்த ஓராண்டில் மட்டும் ஈரோடு மாவட்டத்தில் மட்டும் 2 லட்சம் டன் நெல் உற்பத்தி இழப்பு ஏற்பட்டுள்ளது. அதே போன்று மாவட்டத்தில் ஆண்டு தோறும் சராசரியாக 70 ஆயிரம் டன் நிலக்கடலை சாகுபடி செய்யப்படும். ஆனால் இந்த ஆண்டு நிலக்கடலை விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டதால் சுமார் 4 கோடி ரூபாய் வரை விவசாயிகளுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. மாவட்டத்தில் சுமார் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் உள்ளது. சராசரியாக ஒரு

ஏக்கரில் ஆண்டு ஒன்றிற்கு 40 ஆயிரம் முதல் முதல் 50 ஆயிரம் ரூபாய் வரை கிடைத்து வந்தது. தற்போது கடும் வறட்சி காரணமாக  தென்னை மூலம் கடைத்த வருவாயும் தற்போது கிடைக்க வில்லை. உயிருக்கு போராடிக்கொண்டிருக்கும் மீதமுள்ள தென்னை மரங்களை காப்பாற்ற விவசாயிகள் தண்ணீரை விலைக்கு வாங்கி காப்பாற்றி வருகின்றனர். அதே போன்று மஞ்சள் உற்பத்தியில் ஈரோடு மாவட்டம் முதலிடத்தில் இருந்து வந்தது. ஏற்கனவே மஞ்சளுக்கு உரிய விலை கிடைக்காமல் விவசாயிகள் நஷ்டத்தில் இருந்து வரும் நிலையில் இந்த ஆண்டு வறட்சியால் மஞ்சள் உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. சாகுபடி செய்த மஞ்சளை வறட்சி காரணமாக வெட்டி எடுக்க முடியாமலும், தண்ணீர் இல்லாததால் உரிய விளைச்சல் கிடைக்கவில்லை. இதனால் 5 கோடி ரூபாய் வரை இழப்பு ஏற்பட்டுள்ளது.
இதே போன்று  தோட்ட கலை பயிர்களான வாழை மரவள்ளி, காய்கறிகள் மற்றும் பூக்கள் உற்பத்தியும் கடுமையாக பாதித்துள்ளது. இதன் மூலமாகவும் விவசாயிகளுக்கு பெரும் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டத்தில் நிலவி வரும் வறட்சி பகுதியினை அண்மையில் உயர்நிலைக்குழுவினர் ஆய்வு செய்துள்ளனர். அதைத்தொடர்ந்து தற்போது தமிழக அரசு மாவட்டத்தில் வறட்சி நிலவரம் குறித்து கணக்கெடுக்க வருவாய்த்துறையினருக்கு உத்தரவிட்டுள்ளது. அதனால் தற்போது வருவாய்த் துறையினர் கிராமங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பயிர்களின் நிலவரம் குறித்தும் கணக்கெடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு வழங்கப்படும் நிவாரணத்தொகை குறித்து இதுவரை அரசு எவ்வித அறிவிப்பும் செய்யவில்லை. அதே நேரத்தில் டெல்டா மாவட்டத்தில் வழங்கப்படும் நிவாரணத் தொகை போன்று வழங்கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் ஈரோடு மாவட்ட விவசாயிகள் உள்ளனர். ஏற்கனவே ஈரோடு மாவட்டம் கடந்த சில ஆண்டுகளாக மழை குறைந்த மாவட்டமாக உள்ளது. கடந்த 10 ஆண்டுகளுக்கு பிறகு இந்த ஆண்டு மாவட்டம் கடும் வறட்சியை சந்தித்துள்ளது. இந்நிலையில் கடும் வறட்சியால்  பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு அரசின் முழுமையான நிவாரணத்தொகை உடனடியாக வழங்க வேண்டும் என்பது விவசாயிகளின் கோரிக்கையாக உள்ளது.

## கீழ்பவானி வாய்க்காலில் நாளை திறப்பு கடைக்கோடி வரை தண்ணீர் செல்ல விவசாயிகள் ஒத்துழைக்க கோரிக்கை

ஈரோடு,: கீழ்பவானி விவசாயிகள் நலச்சங்கத்தின் ஆலோசனை கூட்டம் ஈரோட்டில் நடந்தது. இந்த கூட்டத்திற்கு சங்கத்தின் தலைவர் நல்லசாமி தலைமை தாங்கினார். கூட்டத்தில் கீழ்பவானி பாசன பகுதியில் கடுமையான வறட்சி நிலவி வருகிறது. பல இடங்களில் குடிநீர் தட்டுப்பாடும்

ஏற்பட்டு வருகிறது. வரும் 10ம் தேதி கீழ்பவானி பாசன பகுதிக்கு தண்ணீர் திறக்கப்படவுள்ளது. 11 நாட்களுக்கு வினாடிக்கு 2 ஆயிரம் கனஅடி தண்ணீர் அணையில் இருந்து திறக்கப்படவுள்ளதால் கடைக்கோடி வரை தண்ணீர் செல்ல வேண்டியது உள்ளது. இதனால் விவசாயிகள் பொதுப்பணித்துறைக்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும், காவிரி மேலாண்மை வாரியத்தை மத்திய அரசு உடனடியாக ஏற்படுத்தி காவிரி இறுதி தீர்ப்பை நடைமுறைக்கு கொண்டு வரவேண்டும்.

கீழ்பவானி பாசன தலைமை கால்வாயின் நீளம் 124 மைல். இதிலிருந்து கூகலூர், பவானி, ஊஞ்சலூர், சென்னசமுத்திரம் ஆகிய பகிர்வு கால்வாய்களும், கிளைவாய்க்கால்களும் உள்ளது. இந்த வாய்க்கால் பகுதியில் மண்ணரிப்பை தடுக்கவும், கரைஉடைப்பை போக்கவும், ஆக்கிரமிப்புகளை தடுக்கவும், பனைமரங்களை நட பொதுப்பணித்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உட்பட பல்வேறு கோரிக்கை தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இந்த கூட்டத்தில் செயலாளர்கள் கோபிநாத், தங்கராசு, திருப்பூர் மாவட்ட செயலாளர்கள் சண்முகம், வெங்கிடுசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## முதலாம் மண்டலத்தில் கருகும் பயிரைக் காப்பாற்ற பவானிசாகரில் தண்ணீர் திறக்க கோரி வழக்கு

ஈரோடு, : பவானிசாகர் அணையிலிருந்து கீழ்பவானி வாய்க்கால் பாசனத்துக்கு ஆண்டுதோறும் ஆகஸ்ட் 15 முதல் ஏப்ரல் 31 வரை நன்செய் மற்றும் புன்செய் 2.07 லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் திறக்கப்படுகிறது.

நடப்பாண்டில் கடும் வறட்சி காரணமாக முதலாம் மண்டலத்துக்குட்பட்ட நன்செய் பாசனத்துக்கு கடந்த செப்டம்பர் 17 முதல் அக்டோபர் 2ம் தேதி வரை வெறும் 15 நாள் மட்டுமே தண்ணீர் திறக்கப்பட்டது. அதன்பிறகு இரண்டாம் மண்டலத்திற்குட்பட்ட 1 லட்சத்து 3 ஆயிரத்து 500 ஏக்கர் புன்செய் பாசனத்துக்கு மொத்தம் 36 நாள் 3 சுற்றாக இடைவெளி விட்டு தண்ணீர் திறக்க முடிவு செய்யப்பட்டு கடந்த டிசம்பர் 5ம் தேதி முதல் 15 நாட்களுக்கு அதாவது டிசம்பர் 20ம் தேதி வரை தண்ணீர் திறக்கப்பட்டது.

முதல் சுற்று முடிவடைந்த நிலையில் மீண்டும் வறட்சி தலை தூக்கியதால் இரண்டாம் மண்டல பாசனத்துக்கு தண்ணீர் திறக்க முடியாது என பொதுப்பணித்துறையினர் கைவிரித்து விட்டனர். எனவே, பவானிசாகர் அணைக்கு நீலகிரி மாவட்டத்திலுள்ள நீர்மின் அணைகளில் இருந்து தண்ணீர் பெற்று 2ம் சுற்றுக்கு தண்ணீர் திறக்கக் கோரி சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. இதைதொடர்ந்து, நீர்மின் அணைகளில் இருந்து 2 டிஎம்சி., தண்ணீர்

பெறப்பட்டு 2ம் சுற்றுக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. இந்நிலையில் மூன்றாம் சுற்றுக்கு தண்ணீர் திறப்பது தொடர்பாக கீழ்பவானி பாசன விவசாயிகள் மீண்டும் கோரிக்கை விடுத்த நிலையில் நீர்பற்றாக்குறையை காரணம் காட்டி மூன்றாம் சுற்றுக்கு தண்ணீர் தர பொதுப்பணித்துறையினர் மறுத்து விட்டனர்.

எனவே நீலகிரி மாவட்டத்திலுள்ள நீர்மின் அணைகளில் இருந்து மீண்டும் தண்ணீரை எடுத்து பயன்படுத்தி கொள்ள அனுமதி கோரி கீழ்பவானி விவசாயிகள் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தனர். வழக்கை விசாரித்த ஐகோர்ட், பாசன விவசாயிகள், பொதுப்பணித் துறை மற்றும் மின்வாரியத்தினர், வருவாய்துறையினர் ஆகியோர் ஆலோசனை நடத்தி உரிய முடிவெடுக்கும் படி கடந்த மாதம் 25ம் தேதி உத்தரவிட்டது.

அதன் அடிப்படையில், கீழ்பவானி வாய்க்காலில் பிப்ரவரி 10 முதல் 21ம் தேதி வரை 11 நாட்களுக்கு சுமார் 2 டிஎம்சி., தண்ணீரை நீர்மின் அணைகளில் இருந்து பெற்று மூன்றாம் சுற்றுக்கு தண்ணீர் திறக்க முடிவெடுக்கப்பட்டது. இந்த முடிவை முதலில் கீழ்பவானி பாசன விவசாயிகள் ஏற்று கொண்டனர். இந்நிலையில் இரண்டாம் மண்டலத்துக்கு உட்பட்ட நிலங்களுக்கு தொடர்ந்து 2 சுற்றுக்கு தண்ணீர் திறக்கப்பட்டதால் தென்னை, வாழை, கரும்பு போன்ற பயிர்கள் ஓரளவு காப்பாற்றப்பட்டுள்ளது. அதேசமயம் முதலாம் மண்டலத்துக்கு கடந்த செப்டம்பர் 17 முதல் அக்டோபர் 2ம் தேதி வரை 15 நாள் மட்டுமே உயிர் தண்ணீர் திறக்கப்பட்டதாகவும், தற்போது மாவட்டத்தில் நிலவி வரும் கடுமையான வறட்சியால் தென்னை, கரும்பு, வாழை போன்ற பயிர்கள் காய்ந்து கருகி வருகின்றன. எனவே இரண்டாம் மண்டல பாசனத்துக்கு 3ம் சுற்றுக்கு தண்ணீர் திறப்பதற்கு பதிலாக முதலாம் மண்டல பாசன நிலங்களுக்கு 11 நாட்கள் உயிர்தண்ணீர் திறக்க வேண்டும் எனவும் கீழ்பவானி பாசன விவசாயிகள் தரப்பில் கோரிக்கை எழுந்தது.

இதுகுறித்து பொதுப்பணித்துறையினரிடம் கோரிக்கை விடுத்த போது, ஏற்கனவே ஐகோர்ட்டில் வழக்கு நிலுவையில் உள்ளதால் நீர் திறப்பில் மாற்றம் செய்வது குறித்து கோர்ட் மற்றும் அரசு உத்தரவு பெற்ற பிறகே அமல்படுத்த முடியும் என பொதுப்பணித்துறையினர் திட்டவட்டமாக தெரிவித்து விட்டனர்.

இதுகுறித்து கீழ்பவானி பாசன விவசாயிகள் கூறியதாவது: மாவட்டத்தில் நிலவி வரும் கடுமையான வறட்சியால் கீழ்பவானி பாசனத்திற்குட்பட்ட பகுதிகளில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நிலத்தடி நீர்மட்டம் 1200 அடிக்கு கீழ் சென்று விட்ட நிலையில் ஏற்கனவே பயிரிட்டிருந்த தென்னை, வாழை, கரும்பு பயிர்களை காப்பாற்ற முடியாமல் விவசாயிகள்

போராடுகின்றனர். இரண்டாம் மண்டலத்தில் புன்செய் நிலங்களுக்கு 2 சுற்று தண்ணீர் திறக்கப்பட்ட நிலையில் முதலாம் மண்டலத்தில் நன்செய் நிலத்திற்கு கடந்த ஆண்டு செப்டம்பரில்  ஒரு சுற்று மட்டுமே உயிர் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. தற்போது முதலாம் மண்டலத்தில் கடும் வறட்சியால் தென்னை மரங்களின் குருத்துக்களும், கரும்பு பயிர்களும் காய்ந்து அழியும் தருவாயில் உள்ளன. தற்போது முதலாம் மண்டலத்துக்கு தண்ணீர் திறக்காவிட்டால் மீண்டும் அடுத்த ஆண்டு ஜனவரிக்கு பிறகு தான் தண்ணீர் திறக்க வாய்ப்புள்ளது. அதுவரையிலும் முதலாம் மண்டலத்திலுள்ள பயிர்களை காப்பாற்ற முடியுமா என்ற கவலையால் தான் வேறு வழியின்றி 2ம் மண்டலத்திற்கான தண்ணீரை மாற்றி திறக்குமாறு கேட்கிறோம்.

தற்போது பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளான நீலகிரி மற்றும் கேரளாவில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளதால் இம்மாதம் கடைசிக்குள் இரண்டாம் மண்டலத்தின் மூன்றாம் சுற்றுக்கு தண்ணீர் திறக்க வாய்ப்புள்ளது. எனவே தான் தண்ணீர் திறப்பில் சற்றே மாற்றம் செய்யுமாறு பொதுப்பணித்துறையினருக்கு கோரிக்கை விடுத்துள்ளோம். இவ்வாறு விவசாயிகள் தெரிவித்தனர்.

தண்ணீர் திறப்பில் மாற்றம் செய்வது தொடர்பாக சென்னை ஐகோர்ட்டில் கீழ்பவானி பாசன விவசாயிகள் தரப்பில் மேலும் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நேற்று இந்த மனு விசாரணையை ஒருநாள் ஒத்திவைத்து ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது. எனவே இன்று மீண்டும் இம்மனு விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஐகோர்ட்டின் உத்தரவுப்படியே தண்ணீர் திறக்கப்படும் என்பதால் விவசாயிகள் கோர்ட் உத்தரவுக்காக காத்திருக்கின்றனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

10.04.2013 A.M

---

## தண்ணீர் பற்றாக்குறையால் பாதிப்பை தடுக்க சொட்டு நீர் பாசனம் மூலம் காய்கறி சாகுபடி தோட்ட கலைத்துறையினர் ஏற்பாடு

சிவகங்கை,

சிவகங்கை அருகே தண் ணீர் இல்லாமல் காய்கறி உற்பத்தி செய்வதில் சிர மம் ஏற்பட்டதை தொடர் ந்து கலெக்டர் உத்தரவின் பேரில் தோட்டகலைத் துறையினர் சொட்டு நீர் பாசனம் அமைத்து கொடுத்தனர்.

தண்ணீர்பற்றாக்குறை

சிவகங்கையை அடுத்துள் ளது சாலுர் கிராமம். இந்த கிராமம் கத்திரி மற்றும் கீரை ஆகிய உற்பத்தியில் புகழ்பெற் றது. இந்த பகுதி மக்கள் தலை முறை, தலைமுறையாக இந்த தொழிலில் ஈடுபட்டு வருகின் றனர். தற்போது தண்ணீர் பற் றாக்குறையால் காய்கறி உற் பத்தி செய்வதில் சிரமம் ஏற் பட் டது.

இதைத்தொடர்ந்து இந்த கிராமத்திற்கு குறைந்த தண் ணீரில் அதிக காய்கறிகளை உற்பத்தி செய்வதற்காக சொட்டு நீர் பாசன முறையை செயல்படுத்தவும், அது குறித்த விளக்கத்தை அளிக்க

கலெக் டர் ராஜா ராமன் உத்தரவிட்டு இருந்தார். இதன் அடிப்படை யில் சாலுரில் சொட்டு நீர் பாசன மற்றும் நுண்ணிய தெளிப்பு நீர்பாசன செயல் விளக்க முகாம் நடை பெற் றது.

<u>அதிகாரிகள் ஆலோசனை</u>

தோட்டகலைத்துறை துணை இயக்குனர் இருளப்பன் தலைமை தாங்கினார். செட்டி நாடு வேளாண்மை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் செந்தில் குமார், பொறியாளர்கள் செந் தில், வாசுதேவன், துணை வேளாண்மை அலுவலர் பிச்சைமணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

முகாமில் நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ் 100 சதவீத மற் றும் 75 சதவீத மானியத்தில் நுண் ணீர்பாசன கருவிகள் வழங்கும் திட்டம் குறித்தும், வீரிய ஒட்டு காய்கறி நாற்றுகள், விதைகள் வழங்குவது குறித் தும் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் அணில்மற்றும் பறவைகளினால் ஏற்படும் பாதிப்பை தவிர்க்க தேசிய தோட்டகலை இயக்க திட்டத் தின்கீழ் நிழல் வலை வழங்கு வது குறித்து தெரிவிக்கப்பட் டது. முடிவில் தோட்டகலை உதவி இயக்குனர் வெங்கடே சன் நன்றி கூறினார்.

## கொலக்கம்பை பகுதியில் வறட்சி: கால்நடைகளுக்கு கடும் உணவு தட்டுப்பாடு

கொலக்கம்பை,

கொலக்கம்பை பகுதியில் கடும் வறட்சி காரணமாக கால்நடைகளுக்கு கடும் தீவன தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது. இதனால் சோள தட்டைகளை விவசாயிகள் வாங்கி வருகின்றனர்.

<u>கறவை மாடுகள்</u>

கொலக்கம்பை மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள பெரும்பாலான மக்கள் கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் உள்ளிட்ட கால்நடைகளை வளர்த்து அதன் மூலம் பயன் பெற்று வருகின்றனர். இவைகளுக்கு தேவையான உணவுகளான செடி, கொடி, புல் வகைகளை அருகில் உள்ள தேயிலை தோட்டம் வனப்பகுதிகளில் சென்று சேகரித்து உணவாக வழங்கி வருகின்றனர்.

இந்த நிலையில் இப்பகுதிகளில் போதிய அளவு பருவமழை பெய்யாததால் வனங்கள் மற்றும் விவசாய நிலங்கள் வறண்டு காணப்படுகிறது. இதனால் கறவை மாடுகளின் மூலம் கிடைக்கும் பாலும் சராசரியாக குறைந்து வருகிறது. இதனால் வருமானமும் குறைந்து விடுகிறது.

<u>உணவு</u>

எனவே இதனை நம்பியுள்ள விவசாயிகள் பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவித்து வருகிறார்கள். மேலும் கடும் வறட்சியால் கால்நடைகளுக்கு உணவு இன்றி தவித்து வருகின்றனர். வனப்பகுதியிலும் கடும் வறட்சியால் பசுந்தீவன தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது.

எனவே கால்நடைகளுக்கு உணவு இன்றி விவசாயிகள் தவித்து வந்தனர். இந்த நேரத்தில் வகையில் சமவெளி பகுதிகளில் உள்ள கால்நடைகளுக்கு உணவாக வழங்கப் படும் சோளத்தட்டை விலை கொடுத்து கொலக்கம்பை பகுதிகளில் உள்ள கால்நடை களுக்கு உணவாக வழங்கி வருகின்றனர்.

<u>விரக்தி</u>

இதனை உணவாக அளித்தும் போதிய அளவு பால் கிடைப்பது இல்லை என்பதால் விவசாயிகள் பெரும் கவலை அடைந்து உள்ளனர். மேலும் இந்த பகுதிகளில் உள்ள கால்நடைகள் மூலம் பெறப்படும் பாலை ஆவின் பாலகத்திற்கு வழங்கப்படும் நிலையில் போதிய அளவு விலையும் கிடைக்காததால் விவசாயிகள் பெரும் விரக்தி அடைந்து உள்ளனர். எனவே சம்பந்தப்பட்ட துறையினர் இதுபற்றி நடவடிக்கை மேற்கொண்டு வறட்சியான கால நிலைகளில் கால்நடை விவசாயிகளுக்கு மானியம் வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்தி உள்ளனர்.

## பொங்கலூர் பகுதியில் மஞ்சள் விலை உயர்வதால் விவசாயிகள் மகிழ்ச்சி

பொங்கலூர்,

திருப்பூர் மாவட்டம் பொங்க லூர் பகுதியில் விவசாயமே பிர தான தொழிலாக உள்ளது. இங்கு காய்கறிகள், சின்னவெங் காயம் மற்றும் மக்காச்சோளம் அதிக அளவில் சாகுபடி செய்யப் படுகிறது. இந்த நிலையில் கடந்த 2 ஆண் டுகளுக்கு முன்பு மஞ்சள் விலை அதிக ரித்து விற்பனையானது. எனவே விவசாயிகள் மஞ்சள் சாகுபடி செய்வதில் அதிக ஆர்வம் காட்டினார்கள்.

பொங்கலூர் பகுதியில் மட் டும் சுமார் ஆயிரத்துக்கும் மேற் பட்ட ஏக்கர்களில் மஞ்சள் சாகு படி செய்யப்பட்டது. சராசரியாக 1 ஏக்கரில் சுமார் 30 முதல் 40 குவிண்டால் மஞ்சள் மகசூல் கிடைக்கும். ஆனால் இந்த ஆண்டு பருவமழை பொய்த்துப் போனதால் சாகுபடி செய்திருந்த மஞ்சள் விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. ஒரு ஏக்க ரில் இந்த ஆண்டு 20 முதல் 25 குவிண்டால் மஞ்சள் மட்டுமே மகசூல் கிடைக்கும் என்று விவ சாயிகள் தெரிவித்தனர். கடந்த ஆண்டு மஞ்சள் விலை ‘கிடு கிடு’வென உயர்ந்து ஒரு குவிண்டால் ரூ.17 ஆயிரம் வரை சென்றது.

கடந்த பல மாதங்களுக்கு முன்பு மஞ்சள் விலை படிப்படி யாக குறைந்து கடந்த மாதம் ஒரு குவிண்டால் ரூ.3 ஆயி ரத்துக்கு விற்பனையானது. ஆனால் கடந்த சில நாட்களாக மஞ்சள் விலை உயர்ந்து வரு கிறது. தற்போது ஒரு குவிண் டால் மஞ்சள் ரூ.6 ஆயிரம் முதல் ரூ. 7 ஆயிரத்து 500 வரை விற் பனை ஆகிறது. கடந்த மாதம் விற்பனையான விலையை விட தற்போது மஞ்சள் விலை உயர்ந்து வருவது விவசாயி களிடையே மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. தொடர்ந்து மஞ்சள் விலை உயர்வு ஏற் படுமா? என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள் காத்திருக்கின்ற னர். தற்போது உள்ள நில வரப்படி மஞ்சள் உற்பத்தி தேவையைவிட அதிகளவில் இருப்பதாகவே வேளாண் மை துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உரவிலை உயர்வு, ஆட் கள் பற்றாக்குறை, கூலி உயர்வு, மகசூல் குறைவு ஆகியவை விவசாயிகள் மத்தியில் கவ லையை ஏற்படுத்தினாலும் மஞ்சள் விலை உயர்ந்து வரு வது விவசாயிகளிடையே ஓரளவு நிம்மதியை கொடுத் துள்ளது. இங்கு உற்பத்தி செய்யப்படும் மஞ்சளை விவசாயிகள் விற்பனைக் காக அருகில் உள்ள ஈரோட் டுக்கு கொண்டு சென்றனர். இதனால் விவசாயிகளுக்கு போக்குவரத்து செல வும், காலவிரயமும் ஏற்பட்டு வந்தது. ஆனால் தற்போது திருப்பூரில் மஞ்சள் விற்பனை ஏலம் நடப்பதாலும், மஞ்சள் விலை சற்று உயர்ந்து வருவ தாலும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

## பரமத்திவேலூர் தினசரி மார்க்கெட்டில் குண்டு மல்லி பூ விலை திடீர் சரிவு மற்ற பூக்களின் விலை உயர்வு

பரமத்திவேலூர்,

பரமத்திவேலூர் தினசரி மார்க் கெட்டில் குண்டு மல்லி பூ விலை திடீர் சரிவு அடைந்து உள்ளது. மற்ற பூக்களின் விலை உயர்ந்து உள்ளது.

<u>பூக்கள் பயிரீடு</u>

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் தாலுகா நெட்டையாம்பாளையம், செங்கப்பள்ளி, எல்லை மேடு, கொளக்காட்டு புதுார், அண்ணா நகர், கரூர் மாவட் டம் சேமங்கி, முத்தனூர், மூலிமங்கலம் உள்ளிட்ட பகுதிகளில் அதிக அளவில் பல்வேறு வகையான பூக்கள் பயிரிடப்பட்டு உள்ளது.

இந்த பகுதிகளில் விளையும், சம்பங்கி, குண்டு மல்லி, அரளி, ரோஜா, கோழி கொண்டை உள்ளிட்ட பூக்களை விவசாயி கள் பரமத்தி வேலூரில் நடைபெறும் தினசரி பூ ஏல மார்க்கெட்டிற்கு தினந் தோறும் கொண்டு வருகின் றனர். சென்ற வாரம் நடை பெற்ற ஏலத்தில்

குண்டு மல்லி பூ கிலோ ஒன்று ரூ.150க்கும், சம்பங்கி ரூ.120க்கும், கோழிகொண்டை ரூ.30க்கும், அரளி ரூ.75க்கும், ரோஜா கிலோ ஒன்று ரூ.50க்கும் ஏலம் போனது.

குண்டு மல்லி விலை குறைவு

நேற்று காலையில் நடை பெற்ற ஏலத்தில் குண்டு மல்லி பூ கிலோ ஒன்று ரூ.80க்கும், சம்பங்கி ரூ.150க் கும், கோழிகொண்டை ரூ.60க்கும், அரளி ரூ.100க்கும், ரோஜா கிலோ ஒன்று ரூ.80க்கும் ஏலம் போனது. இதில் குண்டு மல்லி பூ மட்டும் விலை சரிவு அடைந்து உள்ளது. மற்ற பூக்களின் விலை உயர்ந்து உள்ளது. பல்வேறு ஊர்களில் இருந்து பரமத்தி வேலூர் மார்க்கெட்டுக்கு வந்து இருந்த வியாபாரிகள் பூக்களை மிகுந்த ஆர்வத்துடன் வாங்கிச் சென்றனர்.

இது குறித்து வியாபாரிகள் கூறும்போது, தற்போது மார்க் கெட்டிற்கு குண்டு மல்லி பூவின் வரத்து அதிகரித்து உள்ளது. இதன் காரணமாக விலை குறைந்து உள்ளதாகவும் மற்ற பூக்களின் வரத்து சற்று குறைந்து உள்ளதால் அவற்றின் விலை உயர்ந்து உள்ளதாகவும் தெரிவித்தனர்.